அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பேயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல்நமசிவாயம்




மலர் : 01, இதழ் : 49 சார்வரி வருடம், ஆவணி மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை (27.08.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை - 07, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார். அரசு மேற்கொள்ளவுள்ள அரசியலமைப்பு திருத்தம், 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரம் உட்பட்ட பல விடயங்கள் இதன்போது பேசப்பட்டுள்ளன.



# தமிழர்களை அமெரிக்கா கைவிடக்கூடாது!

## அமெரிக்கத் தூதுவரிடம் சம்பந்தன் கோரிக்கை

### அரசியல் தீர்வு உட்பட்ட தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை விரிவாக சுட்டிக்காட்டினார்



அமெரிக்கத் தூதுவரை வழியனுப்பும் சம்பந்தன்...

-அப்துல் சலாம் யாஸீம்-

திருகோணமலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் அம்மையார் நேற்றுமாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனை திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து நீண்ட நேர பேச்சு நடத்தினார்.

02

# மூவாயிரம் ரூபா பெறுமதியான பகலுணவு எம்.பி.க்களுக்கு வெறும் 200 ரூபாவுக்கு

## நாடாளுமன்ற நிதிப் பணிப்பாளரின் கருத்தால் கிளம்பியது சர்ச்சை!

Members Financial Benefits

Member Allowance

| | |
|---|---|
| Member Allowance (Salary) | 54,285.00 |
| Entertainment Allowance | 1,000.00 |
| Drivers Allowance | 3,500.00 |
| Telephone Allowance | 50,000.00 |
| Office Allowance | 100,000.00 |
| Transport Allowance for personal staff | 10,000.00 |
| Fuel Allowance (District distance) i.e. Jaffna – 639.53 Lr | 66,511.00 |
| Sitting Allowance (2,500.00*8) | 20,000.00 |
| Total Earnings | 305,296.00 |
| Free Postage Facilities (non financial) | 29,167.00 |
| | 334,463.00 |

Ministers Allowances

| | |
|---|---|
| Telephone Allowance | 50,000.00 |
| Office Allowance | 100,000.00 |
| Transport Allowance for personal staff | 10,000.00 |
| Fuel Allowance (District distance) i.e. Jaffna – 639.53 Lr | 66,511.00 |
| Sitting Allowance (2,500.00*8) | 20,000.00 |
| Total Earnings | 246,511.00 |
| Free Postage Facilities (non financial) | 29,167.00 |
| | 275,678.00 |

★ எம்.பி.யொருவருக்கு மாதாந்த கொடுப்பனவு 3 இலட்சத்து 34 ஆயிரத்து 463 ரூபா.

★ அமைச்சரொருவருக்கு மாதாந்த கொடுப்பனவு 2 இலட்சத்து 75 ஆயிரத்து 678 ரூபா.

02

# வெளிநாட்டுத் தூதரகங்களின் தொழிலாளர் நலன்புரி பிரிவுகளை மூடிவிட அரசாங்கம் தீர்மானம்!

நாட்டிற்கு அதிகளவிலான அந்நிய செலாவணியை கொண்டு வரும் வெளிநாடுகளில் பணிபுரியும் பணியாளர்களின் நன்மைகளை கருத்திற் கொண்டு, இலங்கைக்கான 14 தூதரகங்களில் நடத்திச் செல்லப்படும் தொழிலாளர் மற்றும் நலன்புரி பிரிவுகளை மூடி, அந்த பணத்தை சேமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள தூதரகங்களும் உள்ளடங்குவதுடன், ஊழியர்களை மீள அழைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் எந்தவொரு உடன்பாட்டையும் எட்டாத நிலையிலேயே தொழில் அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிகிறது.

அரசாங்கத்தின் மேலதிக செலவீனங்களை....

02

# சிறைச்சாலையில் 1500 பதவிகளுக்கு வெற்றிடங்கள்



சிறைச்சாலைகளில் கடமையாற்றுவதற்காக சுமார் 1500 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்காக 2016ஆம் ஆண்டு முதல் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், 2019ஆம் ஆண்டு வரை எவரும் கடமைகளுக்காக

02

# நான்கு மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கை!

## இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

02



# 132 தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள்

132 தேசிய பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

302 தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்கள் காணப்பட்ட நிலையில், அதனை நிரப்புவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

முதற்கட்டமாக நேர்முக பரீட்சைகள் நடத்தப்பட்டு, அந்த சந்தர்ப்பத்தில் 170 அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

02



# ஈஸ்ரர் தின தாக்குதல் சம்பவங்கள் குறித்து மைத்ரியின் வீட்டிற்கே சென்று விசாரணை

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் கொழும்பில் அமைந்துள்ள இல்லத்திற்கு நேற்று நேரடியாக சென்றுள்ளனர்.

02

# உத்தியோகபூர்வ இல்லங்களை கோரி அரசியல்வாதிகள் ஏட்டிக்குப் போட்டி!

9ஆவது நாடாளுமன்றத்திற்காக தெரிவாகியுள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களென சுமார் 70 பேர் தமக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியுள்ளதாக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு தெரிவிக்கின்றது.

02

# கோதுமை-அரிசிமா, நிறப்பூச்சுகள் கலந்து மஞ்சள்தூள் விற்பனை!

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை எச்சரிக்கை

02

# கட்சி அடிப்படை உறுப்பினராக இல்லாதவர் என்று வியாக்கியானம்: ஐ.தே.க. தலைவராகும் கருவின் கனவை துவம்சம் செய்தார் ரணில்!

## - முடிவில்லா தொடர்கதையாகும் தலைமைத்துவப் பிரச்சினை -



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பிலான இறுதித் தீர்மானம் செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள செயற்குழு கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படவுள்ளதாக கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம், கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்க தயார் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எழுதிய கடிதம் குறித்து இந்த செயற்குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமைத்துவத்தை முன்னாள் சபாநாயகரிடம் கையளிக்க வேண்டியதன் தேவையை ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளர் லக்ஷ்மன் விஜேமான்ன வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் சிங்கள பௌத்த ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாடும் அதுவே என அவர் கூறியுள்ளார்.

இதற்கு உடனடியாக தலையீடு செய்து கருத்து வெளியிட்ட கட்சியின் தலைவர்....



02

# சுசில் பிரேம ஜயந்த இராஜாங்க அமைச்சராக பதவிப்பிரமாணம்



கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள், தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராக சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

பதவிப் பிரமாண நிகழ்வு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ ஜயசுந்தர ஆகியோர் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

# அங்கொட லொக்காவுக்கு சொந்தமான 42 கிலோ போதைப்பொருள் சிக்கியது

## - உதவியாளர் ஒருவரும் கைது -



படப்பிடிப்பு : கிறிஷான் காரியவசம்

பாதாள உலக தலைவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் ஒருவர் 42 கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள், துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

02

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



| | | | | |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 1014 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | ஆங்கில எழுத்து S | 24 40 47 59 |
| சனிதா வாசனா | 3353ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 19ஆம் திகதி | ஆங்கில எழுத்து T | 38 58 61 62 |
| அத கோட்டிபதி | 1015 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 19ஆம் திகதி | ஆங்கில எழுத்து E | 04 09 12 75 |
| சுப்பர் போல் | 1195 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | ஆங்கில எழுத்து L | 30 36 39 77 |
| அத கோட்டிபதி | 1016 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | ஆங்கில எழுத்து A | 18 19 21 62 |
| அத கோட்டிபதி | 1017 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 21ஆம் திகதி | ஆங்கில எழுத்து R | 12 29 35 49 |
| கோட்டிபதி கப்ருக | 614 ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 21ஆம் திகதி | ஆங்கில எழுத்து I | 05 52 70 71 |
| சுப்பர் போல் | 1197 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | ஆங்கில எழுத்து U | 11 18 50 73 |
| கோட்டிபதி கப்ருக | 615 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | ஆங்கில எழுத்து C | 29 57 68 72 |
| அத கோட்டிபதி | 1020 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 24ஆம் திகதி | ஆங்கில எழுத்து Z | 38 58 66 76 |
| சனிதா வாசனா | 3355 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 24ஆம் திகதி | ஆங்கில எழுத்து S | 02 06 29 71 |
| சுப்பர் போல் | 1198 ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 24ஆம் திகதி | ஆங்கில எழுத்து O | 07 16 21 73 |
| அத கோட்டிபதி | 1021 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி | ஆங்கில எழுத்து O | 01 26 34 40 |
| கோட்டிபதி கப்ருக | 616 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி | ஆங்கில எழுத்து D | 38 60 63 79 |

# கொக்குத்தொடுவாய் வயல் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட தமிழ் விவசாயிகள் கைது!

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட சூரியன் ஆற்றுக்கப்பாலுள்ள வயல் நிலங்களைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ் விவசாயிகள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதுடன், சீரமைப்புப் பணிக்காக பயன்படுத்திய உபகரணங்களும், வாகனங்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றி எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

அதேவேளை, சூரியன் ஆற்றுக்கப்பாலுள்ள பகுதிகளில் இனி தமிழ் மக்கள் விவசாயம் செய்யக்கூடாதென வனவள, வனஜீவராசிகள் திணைக்களத்தினரும், இராணுவத்தினரும் மிரட்டியதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் அப்பகுதி விவசாயிகள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சூரியன் ஆற்றுக்கப்பால் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெரியவெளி, பனிக்கவயல், மாரியாமுனை, கன்னாட்டி, அக்கரைவெளி ஆகிய வயல் நிலங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் காணி உறுதிகளைக் கொண்டவையாகும்.

இப்பகுதிகளில் கடந்த 1984ஆம் ஆண்டுக்கு முன்னர், அதாவது எமது இடங்களை விட்டு இடம்பெயர்வதற்கு முன்னரும், மீள் குடியேற்றத்தின் பின்னரும் குறித்த பகுதிகளில் நாம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தோம். இந்நிலையில், இவ்வருட பெரும்போக நெற்பயிர்ச்செய்கைக்காக வயல் நிலங்களைச் சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தோம். அப்போது அங்கு வருகைதந்த இராணுவத்தினர் மற்றும் வனஜீவராசிகள், வனவளத் திணைக்களத்தினர் குறித்த பகுதிகளில் இனிமேல் பயிர்ச்செய்கை செய்யமுடியாது எனக் கூறியதுடன், அங்கு சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகளைக் கைதுசெய்தனர். அத்தோடு சீரமைப்புக்காக பயன்படுத்திய வாகனங்களும் உபகரணங்களும் அவர்களால் கைப்பற்றப்பட்டன.

மேலும் சூரியன் ஆற்றுக்கப்பாலுள்ள வயல் நிலங்களுக்குச் செல்வதற்காக சூரியனாற்றுப் பாலமும் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பாலமானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதியொதுக்கீட்டிலேயே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், குறித்த பாலம் நிர்மாணிப்பை உடன் இடைநிறுத்துமாறும், அங்கு பாலம் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுபவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டும் எனவும் இராணுவத்தினரும், அரச அதிகாரிகளும் மிரட்டியிருந்தனர். அதேவேளை, அங்கிருந்த ஏனைய விவசாயிகளிடம் இராணுவத்தினர் அடையாள அட்டைகளைப் பெற்று பார்வையிட்டதுடன், அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.

## ஈழவிடுதலை போராட்டத்தின் முதல் வித்து பொன்.சிவகுமாரனின் பிறந்ததின நிகழ்வு!



ஈழ விடுதலை போராட்டத்தின் முதலாவது வித்து பொன்.சிவகுமாரனின் 70 ஆவது பிறந்த தினம் நேற்று நினைவு கூரப்பட்டது. சிவகுமாரன் நினைவு தின ஏற்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஏற்பாட்டு குழுவின் உறுப்பினர் செந்தூரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சிவகுமாரனின் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதேவேளை, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஏற்பாட்டிலும் காலை 10 மணிக்கு நினைவுகூரல் இடம்பெற்றது.

## செய்தித்துளிகள்

இதுவரையில் 32 ஆயிரத்து 816 பேர் தமக்கான தனிமைப்படுத்தலை பூர்த்தி செய்திருப்பதாக 'கொவிட் 19' வைரஸை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

★★★★★★★★★★★

பெண் ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய ஹொரனை காவல்துறை நிலையத்தின் உப காவல்துறை பரிசோதகர் ஒருவர், இங்கிரிய நம்பபான பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★★★★★★★

கடந்த 18 மாதங்களில் சட்டமா அதிபர் திணைக்களம் 23 ஆயிரத்து 645 குற்றவியல் வழக்கு கோவைகளை முடிவுறுத்தியுள்ளது.

★★★★★★★★★★★

கொரோனா வைரஸின் காரணமாக நாட்டுக்கு வரமுடியாமல் வெளிநாடுகளில் தங்கியிருந்த 426 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். கட்டாரில் இருந்து 296 பேரும், ஜேர்மனில் இருந்து 102 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து 23 பேரும் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்ற 10 கைதிகளுக்கும், கென்யாவிலிருந்து நாடு திரும்பிய ஒருவருக்கும் கொவிட் -19 நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழர்களை...



தூதரக அதிகாரிகள் மற்றும் தூதுவருடன் மூடிய அறைக்குள் நடந்த இந்த பேச்சுகளுக்கு வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

அரசியலமைப்பு திருத்தங்கள் குறித்தான அரசின் அறிவிப்பு, அது தொடர்பான தமிழர்களின் நிலைப்பாடு என்பன குறித்து அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளித்த சம்பந்தன், தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகம் அதனை பார்த்து அமைதியாக இருக்க முடியாதெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நேற்றைய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சம்பந்தன் கூறியதாவது, தமிழ் கட்சிகள், தேசியக் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக நடந்து கொண்ட அல்லது மக்களுக்கு மத்தியில் கொடுக்கப்பட்ட உதவிகள், பண உதவிகள் ஏனைய நடவடிக்கைகள் அத்துடன் விருப்பு வாக்குகள் என்று சொல்லப்படுகின்ற வேட்பாளர்கள் தங்களுடைய வாக்குகளை பெறுவதற்காக முயற்சி செய்ததன் காரணமாக அதிக வாக்குகள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் கட்சி கடந்த காலங்களைப் போல போதிய ஆசனங்களைப் பெற முடியவில்லை என்பதை தூதுவரிடம் சுட்டிக்காட்டினேன்.

கட்சிக்குள் இருக்கின்ற ஒரு சில முரண்பாடுகள் காரணமாக மக்கள் மத்தியிலும் பாரிய பின்னடைவுக்கு காரணமாக இருந்த காரணத்தினால் தான் நாங்கள் கடந்த காலத்தைப்போல் பாரிய வெற்றியை அடைய முடியாமல் போய்விட்டது என்பது நான் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்.

அதேபோல் இது தொடர்பாக எதிர்காலத்தில் கூடிய கவனம் செலுத்தி இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொண்டேன் - என்றார் சம்பந்தன்.

## அங்கொட லொக்கா...

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைவாக அம்பதலே பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் டுபாய் நாட்டுக்கு தப்பித்துச்செல்ல முயற்சித்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களில் அங்கொட லொக்காவின் உதவியாளர்களாக இருந்த இருவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, இந்த தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

சுற்றிவளைப்பின்போது, 3 டீ.56 ரக துப்பாக்கிகள், 170 ரவைகள் மற்றும் 9 மில்லிமீட்டர் நீளமுடைய கைத்துப்பாக்கியுடன் 42 கோடி ரூபா பெறுமதியுடைய ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிகள் மற்றும் போதைப்பொருள் என்பன அங்கொட லொக்காவுக்கு சொந்தமானது என்பது விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## மூவாயிரம்...

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வின் இரண்டாம்நாள் அமர்வு நேற்று நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர்களின் செலவீனங்கள் குறித்து விளக்கமளித்த நாடாளுமன்ற நிதிப் பணிப்பாளர் டபிள்யூ.ஏ.எஸ். உபநந்த தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

நாடாளுமன்ற கொடுப்பனவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விபரங்களை வெளியிட்டு விளக்கமளித்த அவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு நாடாளுமன்ற உணவு விடுதியில் மதிய உணவு 200 ரூபாவுக்கும் சிற்றுண்டியுடன் தேநீர் 50 ரூபாவுக்கும் வழங்கப்படுவதாக தெரிவித்ததுடன் வெளியில் மூவாயிரம் ரூபா பெறுமதியான உணவே 200 ரூபாவுக்கு நாடாளுமன்றத்தில் எம்.பி.க்களுக்கு வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

அவரின் இந்த உரைக்கு புதிய எம்.பி.க்கள் பலர் அதிருப்தி வெளியிட்டனர். நாடாளுமன்றம் குறித்து மக்கள் பார்வை விமர்சனங்களுடன் இருக்கையில் இவ்வாறான கருத்து ஊடகங்களுக்கு சென்றால் மக்கள் நாடாளுமன்றம் குறித்தும் எம்.பி.க்கள் தொடர்பிலும் அதிருப்தியடையக் கூடுமென்று எச்சரித்த எம்.பி.க்கள் பலர் இது தொடர்பில் ஆக்கபூர்வ நடவடிக்கையொன்றை எடுக்குமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்தனர். எவ்வாறாயினும் தாம் இப்படிக் குறிப்பிட்டது அந்த உணவுக்கான பெறுமதியை கருத்திற்கொண்டுதானென்றும் அதில் தவறு இருந்தால் வருந்துவதாகவும் நாடாளுமன்ற நிதிப் பணிப்பாளர் தமது உரையில் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து எம்.பி.க்கள் பலரும் பல்வேறு யோசனைகளை முன்வைத்திருந்தனர். இவற்றை கவனத்திற்கொள்வதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் புதிய எம்.பி.க்களுக்கு உறுதியளித்தார்.

(நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெறும் கொடுப்பனவுகள் விபரம் மற்றும் அமைச்சர் ஒருவர் பெறும் கொடுப்பனவு விபரம் என்பன குறித்து நாடாளுமன்ற நிதிப் பணிப்பாளர் வெளியிட்ட அட்டவணை முன்னே இணைக்கப்பட்டுள்ளது)

## கோதுமை அரிசிமா...

சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சள் தூளில் 80 சதவீதம் கோதுமை மா, அரிசி மா மற்றும் நிறப்பூச்சிகள் கலக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய, நுகர்வோர் விவகார அதிகார சபை நாடு பூராகவுமுள்ள வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொண்ட மஞ்சள்தூள் மாதிரிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் ஊடாக இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

சந்தையிலுள்ள மஞ்சள் தூளில் கோதுமை மா மற்றும் அரிசி மா ஆகியவற்றிற்கு மேலதிகமாக நிறப்பூச்சுக்கள் கலக்கப்பட்டுள்ளமையினால், அவற்றை உட்கொள்வோருக்கு ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படுமா என்ற ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டு நிறைவடைந்ததன் பின்னர், குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபை தெரிவிக்கின்றது.

## உத்தியோகபூர்வ...

எனினும், அமைச்சுக்கள் வசம் 35 உத்தியோகபூர்வ இல்லங்கள் மாத்திரமே காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார். கோரிக்கையாளர்களின் தேவைகள், தூரம், முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் வீடுகளை வழங்கும் திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இது அமைச்சுக்களில் காணப்படுகின்ற பாரிய சர்ச்சைக்குரிய பிரச்சினை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 8ஆவது நாடாளுமன்றத்திலிருந்து தோல்வி அடைந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக்கான உத்தியோகபூர்வ வீடுகளை கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறைச்சாலை

இணைத்துக்கொள்ளப்படவில்லை.

கடந்த ஆட்சி காலத்தில் நியமன கடிதங்கள் இருவேறு சந்தர்ப்பங்களில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அது பல்வேறு காரணங்களால் தடைப்பட்டது.

அதனால் ஊழியர்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாக அறிய முடிகின்றது.

ஆண்டொன்றிற்கு ஓய்வு பெறும் அதிகாரிகளுக்கு ஒப்பான அளவில் புதிய அதிகாரிகள் இணைக்கப்படாமையினால் சிறைச்சாலை கட்டமைப்புக்குள் அதிகாரிகளின் தேவை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது,

அதனால் கொழும்பிலுள்ள சிறைச்சாலைகளுக்கு மாத்திரம் 500ற்கும் அதிகமான உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஈஸ்ரர் தின...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் நேற்றுக்காலை அங்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு கடந்த 21 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தன்னால் குறித்த பொலிஸ் பிரிவில் முன்னிலையாக முடியாது எனவும் கொழும்பில் அமைந்துள்ள தனது இல்லத்திற்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்து கொள்ளுமாறும் முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தார்.

அதற்கமைய ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் நேற்றுக்காலை அவரின் இல்லத்திற்கு சென்ற குழு 9 மணிநேரம் வாக்குமூலம் பெற்றது.

## நான்கு மாதங்களுக்கான...

நாடாளுமன்றம் இன்று காலை 9.30 இற்கு கூடவுள்ளது.

இதன்போது செப்டெம்பர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான கால எல்லைக்கான இடைக்கால கணக்கு அறிக்கை முன்வைக்கப்படவுள்ளது.

இதனையடுத்து, இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதம் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

இந்த இரண்டு தினங்களிலும் காலை 9.30 முதல் மாலை 6.30 வரை இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

## 132...

எனினும், எஞ்சிய 132 தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்கள் நியமிக்கப்படாத நிலையில், அந்த பாடசாலைகளில் தற்போதும் பதில் அதிபர்களே கடமையாற்றி வருகின்றனர்.

அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே பதில் அதிபர்கள் தேசிய பாடசாலைகளில் கடமையாற்றி வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அவ்வாறு பதில் அதிபர்களை இல்லாது செய்து, நிரந்தரமாக தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க தவறியுள்ளதாகவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார். கடந்த ஆட்சி காலத்தில் சில பதில் அதிபர்களுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் கீழ் மேலும் பல பதில் அதிபர்கள் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு...

கட்டுப்படுத்தும் நோக்குடன் தொழிலாளர் மற்றும் நலன்புரி பிரிவுகளை மூட தீர்மானம் எட்டப்பட்டதாக தொழில் அமைச்சின் செயலாளர் மாபா பத்திரண தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சேவைகளின் போது, இந்த பிரிவானது அரசாங்கத்திற்கு இலாபத்தை ஏற்படுத்தாத பின்னணியிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பிரிவை நடத்திச் செல்லும் 14 தூதரகங்களுக்கு இந்த நடைமுறை செல்லுபடியானதாகும். பிரச்சினைகளை எதிர்நோக்கும் வெளிநாட்டு பணியாளர்களுக்காக பாதுகாப்பான வீட்டு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், தொழிலாளர் பிரச்சினைகளுக்கு தலையீடு செய்தல், காப்புறுதி திட்டத்தை பெற்றுக்கொடுத்தல், மரணம் அல்லது அவசர நிலைமைகளின் போது நட்டஈட்டை பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்காக இந்த பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டிற்கு கடந்த ஆண்டில் மாத்திரம் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களினால் 6.8 பில்லியன் டொலர் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ள பின்னணியிலேயே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளது.

இலங்கையில் தேயிலை ஏற்றுமதி மற்றும் ஆடை உற்பத்தி ஏற்றுமதி ஆகியவற்றின் ஊடாக கிடைக்கும் வருமானத்தை விடவும், வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்களினால் இலங்கைக்கு கிடைத்த வருமானம் அதிகமானதாக காணப்படுகின்றது.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், கட்டார், ஓமான், தென்கொரியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள தொழிலாளர் மற்றும் நலன்புரி பிரிவுகளில் மாத்திரம் 160 ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இதற்காக அரசாங்கத்திற்கு ஆண்டொன்றிற்கு 900 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும், அதனால் தொழிலாளர் பிரிவுகளை மூட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த தீர்மானத்தை எட்டும் போது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக ஊழியர்களுடனும் கலந்துரையாடியிருக்க வேண்டும் என கூறப்படுகின்றது.

தொழில் அமைச்சர் இந்த தீர்மானத்தை எட்டும் போது, வெளிநாட்டு வேலை வாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன அதில் கலந்துகொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தம்மை அழைக்காத போதிலும், அரசாங்கத்தின் தீர்மானம் இதுவென்றால், அதனுடன் இணங்கி செல்ல வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மாத்திரம் வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்கு 2 இலட்சத்து மூவாயிரம் இலங்கையர்கள் சென்றுள்ளதுடன், அவர்களில் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் சவுதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கே சென்றுள்ளனர்.

வெளிநாடுகளிலுள்ள 75 சதவீதமான இலங்கை பணியாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளிலேயே பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. தலைவராகும்...

ரணில் விக்ரமசிங்க, கட்சியின் யாப்பிற்கு அமைய கட்சியின் உயர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டியவர் கட்சியின் செயற்குழு அல்லது நிறைவேற்று சபையின் உறுப்பினராக இருந்திருக்க வேண்டியது அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

கரு ஜயசூரிய, சபாநாயகராக பதவியேற்ற நாள் முதல் அந்த பதவிகளில் மாத்திரமன்றி, கட்சியின் உறுப்புரிமையிலும் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக அவர் நினைவூட்டியுள்ளார்.

அதனால், கட்சியின் யாப்பிற்கு அமைய கரு ஜயசூரியவிற்கு தலைமைத்துவத்திற்காக முன்னிலையாக முடியாது என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தான் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தலைமைத்துவத்திற்கு இளைய அரசியல்வாதிகள் அடுத்த செயற்குழுவில் முன்னிலையாக முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க, இளைய தலைவர் என்றால் காலை 10 மணிக்கு நித்திரையிலிருந்து விழிப்பவர் அல்லவென கூறியுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தனவை இலக்கு வைத்தே இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளதாக அங்கிருந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, இதற்கு முன்னர் தலைமைத்துவத்திற்காக 4 அல்லது 5 பெயர்கள் மாத்திரமே முன்மொழியப்பட்ட போதிலும், அது தற்போது 10 முதல் 15 வரை அதிகரித்துள்ளமையினால், அடுத்த செயற்குழு கூட்டத்திலேயே வாக்கெடுப்பிலோ அல்லது இணக்கப்பாட்டிலோ தலைவர் தெரிவு இடம்பெற வேண்டும் என முன்னாள் அமைச்சர் ரங்கே பண்டார கூறியுள்ளார்.

இதையடுத்து, ரணில் விக்ரமசிங்க இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானிஸ்தான்

# வெள்ளத்தால் 35 பேர் பலி!



வடக்கு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளத்தால் 35 பேர் பலியாகினர். 76 பேர் காயமடைந்துள்ளனர்.

வடக்கு ஆப்கானிஸ்தான் பர்வான் மாகாண பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வெள்ளத்தால் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. மேலும், நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

வெள்ளத்தால், இதுவரை 35 பேர் பலியாகியுள்ளனர், 76 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாகாண மருத்துவமனையின் தலைவர் அப்துல் காசிம் சாங்கின் தெரிவித்தார்.

இதுகுறித்து பர்வான் மாகாணத்தின் செய்தித் தொடர்பாளர் வாகிதா ஷாகர் கூறுகையில்,

நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்புக் குழுவினர் மீட்டுவருகின்றனர். இதனால் உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் பெய்த மழையால் மாகாணத்தின் மத்திய பகுதி முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

கோடை காலங்களில் பெரும்பாலும் வடக்கு மற்றும் கிழக்கு ஆப்கானிஸ்தானில் அதிகளவிலான மழை பெய்வதால் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவருகின்றது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழப்பது குறிப்பிடத்தக்கது.

# கறுப்பினத்தவர் சுடப்பட்ட விவகாரம்: அமெரிக்காவில் தொடரும் போராட்டம்!



அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் கறுப்பின இளைஞரை நோக்கி பொலிஸார் இருவர் துப்பாக்கியால் பல முறை சுடும் வீடியோ ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியானதையடுத்து, அங்கு இரண்டாவது நாளாக தீவிர போராட்டம் நடைபெற்றுவருகிறது.

விஸ்கான்சின் மாகாணம், கெனோஷா நகரில் கறுப்பின இளைஞர் ஜேக்கப் பிளேக்கை பொலிஸார் 7 முறை துப்பாக்கியால் சுடும் வீடியோ வெளியானதைத் தொடர்ந்து, அந்த நகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக்கு அந்த உத்தரவு அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, போராட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

இதனால் அந்தப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் மே 25ஆம் திகதி மினசோட்டா மாகாணத்தில் கறுப்பினத்தவரைச் சேர்ந்த ஜோர்ஜ் ஃப்ளாய்ட்டின் கழுத்தில் வெள்ளையின பொலிஸ் அதிகாரி முழங்காலை வைத்து நெரித்துக் கொன்ற சம்பவ வீடியோ வெளியாகியதால் போராட்டம் வெடித்தது. தற்போது அதேபோன்ற சம்பவம் விஸ்கான்சின் மாகாணத்தில் நடைபெற்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் காரில் ஏறுவதற்காக வரும் கறுப்பின இளைஞர் ஜேக்கப் பிளேக்கை துப்பாக்கியைக் காட்டியபடி பின்தொடர்ந்துவரும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள், அந்த இளைஞரை பிடித்து காரின் மீது தள்ளி பின்புறத்திலிருந்து ஏழு முறை சுடும் வீடியோ பதிவு வெளியாகியது. இதை அங்கு மறைந்திருந்த வெள்ளை இனத்தைச் சேர்ந்த ரேசீன் ஒயிட் என்பவர் படம் பிடித்துள்ளார். இந்தச் சம்பவம் நடைபெற்றபோது காருக்குள் அந்த கறுப்பின இளைஞரின் மனைவி, குழந்தைகள் இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, விஸ்கான்சின் மாகாணத்தில் மக்கள் தெருக்களில் கூடி பொலிஸாரின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஏராளமான வாகனங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

வன்முறை பரவாமல் தடுக்க திங்கட்கிழமை காலை 7 மணி வரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. எனினும், விஸ்கான்சின் காவல்நிலையத்தை நோக்கி போராட்டக்காரர்கள் நடத்திய பேரணியில் மோதல் வெடித்தது. போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

இந்த நிலையில், துப்பாக்கிச்சூட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டாவது நாளாக போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

# பொலிவிழக்கிறது ஓணம் பண்டிகை!



கேரள அரசு ஓணம் பண்டிகைக் காலத்தில் வெளி மாநிலங்களிலிருந்து பூக்கள் கொண்டு வருவதற்குத் தடைவிதித்திருப்பது, மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்குப் பரவலாக எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

கேரள மாநிலத்தின் மிக முக்கியமானது ஓணம் பண்டிகை. ஜாதி, மத வேறுபாடின்று உலகெங்கிலுமுள்ள மலையாளிகள் ஓணம் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். கடந்த ஓகஸ்ட் 22ஆம் திகதியிலிருந்து தொடங்கி, அடுத்த பத்து நாட்களுமே ஓணம் பண்டிகை நாட்களாகக் கருதப்படுகிறது. பத்தாவது நாளான 'திருவோணம்' நட்சத்திரம்தான் ஓணம் கொண்டாட்டத்தின் முக்கியமான நாள்.

ஓணம் பண்டிகைக் காலத்தில் மகாபலி சக்கரவர்த்தி தனது நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு ஆண்டுதோறும் வருவார் என்பது மலையாளிகளின் நம்பிக்கை. மதம் மாறி கிறிஸ்தவராக, இஸ்லாமியராக மாறிவிட்டாலும்கூட, தங்களது பாரம்பரியத்தை மறந்துவிடாமல் அனைவரும் ஓணம் பண்டிகையைக் கொண்டாடுவதால், இதை கேரள மாநிலத்தின் மத நல்லிணக்கத்தின் அடையாளமாகவே அந்த மக்கள் பார்க்கிறார்கள்.

ஓணம் பண்டிகையின் மிக முக்கியமான அம்சம் 'பூக்களம்' எனப்படும் பூக்களாலான கோலமிடுவது. பெரிய கோலம் போட்டு அதில் பல வண்ணப் பூக்களைப் பரப்பி முற்றத்தை அலங்கரிப்பார்கள். பல கிறிஸ்தவ தேவாலயங்களின் முகப்புகளில் கூட ஓணம் பண்டிகைக் காலத்தில் 'பூக்களம்' போடப்படும் என்பதுதான் தனிச்சிறப்பு.

ஓணம் பண்டிகையின் தேவைக்காக அண்டை மாநிலங்களான தமிழகம், கர்நாடகத்திலிருந்து பல கோடி ரூபா மதிப்பிலான மலர்கள் ஆண்டுதோறும் தருவிக்கப்படுவது வழக்கம். அதை நம்பி தமிழகத்தின் கன்யாகுமரி, திண்டுக்கல், நீலகிரி, ஈரோடு, சேலம், கோவை, மதுரை, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் விவசாயிகள் பல்வேறு மலர்களைப் பயிரிடுகிறார்கள்.

இந்த ஆண்டு கேரள அரசு ஓணம் தினத்தன்று வெளி மாநில மலர்களுக்குத் தடைவிதித்து ஆணை பிறப்பித்திருக்கிறது. பூக்கள் மூலம் கொரோனா பரவும் என்கிற அறிவிப்பையும் செய்திருக்கிறது. ''அண்டை மாநிலங்களிலிருந்து காய்கறிகள், முட்டை, இறைச்சி போன்றவை கொண்டுவருவதில் பரவாத கொரோனா, ஓணம் பண்டிகைக்கான பூக்கள் மூலம் பரவும் என்கிற கேரள அரசின் அறிவிப்பு விசித்திரமாக இருக்கிறது'' என்று பூ வியாபாரிகள் மட்டுமல்ல, பொதுமக்கள் மத்தியிலும் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

ஆலப்புழை மாவட்ட ஆட்சியரோ, 'வீட்டுத் தோட்டத்திலிருக்கும் பூக்களை மட்டுமே 'பூக்களம்' அமைக்கப் பயன்படுத்துங்கள்' என்கிற வேண்டுகோளுடன் மாவட்டம் முழுவதும் போஸ்டர் அடித்து எச்சரித்திருக்கிறார். ''நோயை விலைக்கு வாங்க வேண்டுமா? சந்தையில் விற்கப்படும் பூக்களைத் தவிர்க்கவும், கொவிட் பரவலைத் தடுக்கவும்'' என்று அந்தப் போஸ்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரள அரசின் அறிவிப்பால் ஓணம் கொண்டாடும் கேரள மக்களின் முகங்கள் மட்டுமல்ல, பூ வியாபாரிகள், மலர் விவசாயிகளின் முகங்களும் பயிரிடப்பட்ட தோட்டங்களிலுள்ள பூக்களும் வாடுகின்றன.

# எப்போதெல்லாம் தமிழர் தாயகம் ஆக்கிரமிக்கப்படுமோ அப்போதெல்லாம் வீரத் தமிழன் பிறப்பெடுப்பான்

## அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை எச்சரித்தார் ரவிகரன்



தமிழர் தாயகப் பரப்புகளில் எப்போதெல்லாம் அந்நியர்களது ஆக்கிரமிப்புகள் இடம்பெறுகின்றதோ, அப்போதெல்லாம் அத்தகைய அந்நிய ஆக்கிரமிப்புகளைத் தகர்ப்பதற்கு ஒரு வீரத் தமிழன் பிறப்பெடுப்பான் - என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரித்துள்ளார்.

முல்லைத்தீவில் அமைக்கப்பட்டிருந்த ஒல்லாந்தரது கோட்டையை மாவீரன் பண்டாரவன்னியன் வெற்றிகொண்ட 217ஆம் ஆண்டு வெற்றிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு கோட்டை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து மாவீரன் பண்டாரவன்னியனுக்கு தனது அஞ்சலிகளைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வீரத்தமிழன் பண்டாரவன்னியனின், வீர நாள் இன்றாகும். இங்கே அமைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயருடைய கோட்டைக்குள் புகுந்து பீரங்கிகளைக் கைப்பற்றிய தினம் இன்றாகும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் அந்நியர்களின் ஆக்கிரமிப்புகள் எப்போதெல்லாம் இடம்பெறுகின்றதோ, அப்போதெல்லாம் தமிழர்கள் அத்தகைய ஆக்கிரமிப்புகளுக்கெதிராக போராடியிருக்கின்றனர்; போராடுகின்றனர். அந்தவகையில் இவ்வாறு அந்நிய ஆக்கிரமிப்புக்கெதிராக போராடிய வீரனுக்கு எமது அஞ்சலிகளைச் செலுத்தியிருக்கின்றோம்.

அதேவேளை, வரலாற்று நாளிலே இந்த இடத்திலிருந்து அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கொரு எச்சரிக்கை விடுக்கின்றேன்.

எப்போதெல்லாம் எமது முல்லைத்தீவு மண்ணிலும், எமது தமிழர் தாயகப் பகுதிகளிலும் உங்களுடைய ஆக்கிரமிப்புகளைச் செய்ய முற்படுகின்றீர்களோ, அப்போதெல்லாம் அத்தகைய ஆக்கிரமிப்புகளைத் தகர்ப்பதற்கு ஒரு வீரத் தமிழன் பிறப்பெடுப்பான் என்பதை இங்கே கூறிவைத்துக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

# வவுனியாவில் இடம்பெற்றது விதை நெல் விற்பனை ஆரம்ப நிகழ்வு

(வவுனியா)



வவுனியா விதை உற்பத்தியாளர் சம்மேளத்தினால் விவசாயத் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கமைவாக உற்பத்திசெய்யப்பட்ட விதை நெல் விற்பனை ஆரம்ப நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன விற்பனை நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

குறித்த விதை நெல்வகைகள் மாவட்டத்திற்குள்ளேயே உற்பத்திசெய்யப்பட்டு விவசாயத் திணைக்களத்தால் அதன் முளைதிறன் பரிசோதிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அந்தவகையில் BG-352, BG-360, AT-362, BW-367, BG-406, BG-450 இனங்களைக்கொண்ட விதை நெல்வகைகள் விற்பனைக்காக இருப்பில் உள்ளதுடன், 20.5 கிலோகிராம் அளவுகொண்ட நெல்மூடை 1,800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் மாகாண நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் ந.சிறிஸ்கந்தராசா, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அருந்ததி வேல்சிவானந்தம் மற்றும் கமக்காரர் அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கின் ஆளுநராக இராணுவ அதிகாரியை நியமிக்குமாறு நானே கோரினேன் என்கிறார் டக்ளஸ்



முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் சந்திரசிறியை வடக்கின் ஆளுநராக நியமிக்குமாறு இந்த அரசாங்கம் வந்தவுடன் தான் கோரியிருந்ததாக கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளை சந்தித்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கில் இராணுவ அதிகாரியை ஆளுநராக நியமிக்கும் நிலைப்பாடு இதுவரை அரசிடம் இல்லை. எனினும், முன்னாள் ஜெனரல் சந்திரசிறியை ஆளுநராக நியமிக்குமாறு இந்த அரசாங்கம் வந்தவுடன் நான் கோரியிருந்தேன்.

ஏனெனில், அவருக்குப் பின்னர் ஆளுநராக வருகைதந்த எந்த சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. எனவே, சந்திரசிறியை நியமிக்க கோரினேன். எனினும், இராணுவ அதிகாரியை நியமிக்காமல் சிவில் அதிகாரியையே நியமிக்கவேண்டும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் அன்று கூறினார்கள்'' - எனத் தெரிவித்தார்.

## வவுனியாவில் களவாடப்பட்ட மாடு :

# மாடு அறுக்கும் தொழுவத்தில் இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த நிலையில் கண்டுபிடிப்பு



வவுனியா நெளுக்குளம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல்போன மாடுகள் மாடு அறுக்கும் தொழுவத்தில் இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெளுக்குளம் பகுதியில் மாடு காணாமல்போன நிலையில், மாட்டின் உரிமையாளர் தேடி வந்துள்ளார். இந்நிலையில், அவரின் மாடு வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட சோயா வீதியில் அமைந்துள்ள மாடு அறுக்கும் தொழுவத்தில் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து மாட்டின் உரிமையாளர் அங்கு சென்று இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த மாடுகளை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது அங்கு காணாமல்போன மாடு காணப்பட்டுள்ளது. அதனையடுத்து மாட்டின் உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த மாட்டை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர்.

காணாமல்போன மாட்டை இறைச்சிக்காக மாடு அறுக்கும் தொழுவத்திற்கு வழங்கிய குற்றச்சாட்டில் பட்டக்காடு 6ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த 29 வயது மதிக்கத்தக்க நபரொருவரை வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வவுனியாவில் மாடுகள் களவாடப்படுகின்றமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் 100இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
தமிழன்
தமிழன் தினசரி மற்றும் வாராந்த
பத்திரிகையில் 6.2cm X 3cm
அளவில் சிறுவிளம்பரங்களை
பிரசுரித்திட 600 ரூபா மட்டுமே.
தொடர்புகளுக்கு:
077 693 0739, 076 139 3805

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

2020 ஓகஸ்ட் 27ஆம் திகதி, வியாழக்கிழமை

# தவிர்க்க முடியாத இந்தியா!

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக வெளிவரும் செய்திகள் குறித்து புதுடில்லி ஆழ்ந்த கரிசனை கொண்டிருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

“அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்குமாயின், அதுகுறித்து இந்தியாவின் கரிசனையை அது பெறுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக, தமிழ் பேசும் சமூகங்களின் நலன்கள் குறித்து இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது. மாறாக எங்களை அறிவுறுத்தாமல் எதுவும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் இராஜதந்திர ரீதியில் அதனை அணுகவும் புதுடில்லி தயாராகவே உள்ளது. இலங்கையில் நிலையான ஆட்சி பெரும்பான்மையான மக்கள் ஆதரவுடன் அமைந்துள்ளதை இந்தியா வரவேற்கிறது. அது நல்ல விடயம். அப்போதே மக்களின் முக்கியமான பிரச்சினைகளை தீர்க்கலாம்” என்றும் இந்தச் சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டாரென செய்திகள் வெளிவந்துள்ளன.

மூன்றிலிரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மை பலத்தை அண்மித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்த கையோடு மேற்கொள்ளப்படவுள்ள அரசியலமைப்புத் திருத்த ஏற்பாடுகளை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துவரும் சூழ்நிலையில், இந்தியாவின் இந்த நிலைப்பாடு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கடந்த வாரம் சந்தித்திருந்தபோது கூட இதனையொட்டிய கருத்துகளையே இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்திருந்தார் என்றபோதும் மீண்டும் அவர் இதனை அழுத்தம் திருத்தமாக கூறியிருப்பது ஆட்சியாளர்களுக்கு இந்தத் தகவல் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தை விட இந்தியா இதுவிடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை காட்டுவதற்காகவுமாக இருக்கலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியா அதன் நீண்டகால நண்பனாக இருந்துவருகிறது. கடந்த போர்க்காலங்களில் கூட தமிழர் நலன்களை புறந்தள்ளி, இலங்கை அரசுக்கு இந்தியா உதவுவதாக விமர்சனங்கள் வந்தன. இலங்கைத் தமிழர் நலன்களுக்கு அப்பால் பிராந்திய ஒத்துழைப்பு, தனது நாட்டின் நலன் என்பவை காரணமாக இந்தியாவின் செயற்பாடுகள் அப்போது அமைந்திருக்கக்கூடும். அதுகுறித்து இங்கு விவாதிப்பது உசிதமல்ல. ஆனாலும் சில விடயங்களில் இந்தியா தனது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருப்பதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

தமது பிரதமர் ஒருவரை இழந்த துயரத்தை ஒருபுறம் வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் விட்டுக்கொடுக்காமல் செயற்பட்ட பாரதப் பிரதமர்கள் அடல் பிஹாரி வாஜ்பாய், மன்மோகன்சிங் வரிசையில் இப்போது நரேந்திரமோடி நிற்கிறார்.

இன்னொரு நாட்டின் உள்ளக விவகாரங்களில் ஓரளவுக்குமேல் தலையீடு செய்யமுடியாதென்றபோதிலும் அதற்கும் மேலே சென்று ஈழத்தமிழர் விடயத்தில் கரிசனை காட்டி நிற்கின்றது புதுடில்லி. இலங்கையில் தமிழர் நலன்கருதி அன்று இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடான மாகாண சபை முறைமை இரத்துச்செய்யப்பட்டால் அது தமிழர்களுக்கு உள்ள குறைந்தபட்ச உரிமை இல்லாமல் போகும் என்பதற்கப்பால் இந்தியாவுக்கும் அது தன்மானப் பிரச்சினை. அதில் தெளிவாக இருக்கிறது புதுடில்லி.

இந்தியா எமக்கு அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று கூறுவோர் நடைமுறை பூகோள அரசியல் யதார்த்தங்களை வெகுவாக புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு தனது வெளிவிவகார அமைச்சரான மூத்த இராஜதந்திரி ஜெய்ஷங்கரை பிரதமர் நரேந்திர மோடி கொழும்புக்கு அனுப்பி வாழ்த்தி, இந்தியாவுக்கு முதலில் வரவழைத்து வரவேற்பளித்தமைக்குள் இந்தியாவில் நலன்கள் மட்டுமல்ல, அதனுள் ஈழத்தமிழர் அபிலாஷைகளும் உள்ளடங்குகின்றன.

இதுவொன்றும் இலங்கை அரசுக்குத் தெரியாத விடயமல்ல. இவையெல்லாவற்றுக்கும் அப்பால் என்னதான் உள்நாட்டில் வலுவான ஆட்சி இருந்தாலும், பிராந்தியத்தில் அல்லது சர்வதேச சமூகத்தில் இலங்கையானது சில விடயங்களில் இந்தியாவின் ஆதரவின்றி செயற்பட்டுவிட முடியாது. அதுதான் உண்மை.

இவ்வாறான பின்னணியில் அரசியலமைப்புத் திருத்தங்களை செய்யத் துணிந்துள்ள இலங்கை ஆட்சியாளர்கள், அத்துடன் சேர்ந்தபடி 13 ஆம் திருத்தத்தில் கையை வைத்து சுட்டுக்கொள்ள மாட்டார்கள் என்று திடமாக நம்புகிறோம். ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த ஆகியோர் மட்டுமல்ல, இந்த அரசின் மூத்த அமைச்சர்கள் பலரும் இதன் தாற்பரியத்தை புரிந்தவர்கள். உணர்ந்தவர்கள். பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கதை சொல்வதுபோல நரேந்திர மோடிக்கு கதை சொல்லி சமாளிக்க முடியாது என்பதொன்றும் இவர்களுக்கு தெரியாததல்ல. இந்தியாவின் ஆதங்கங்களை புரிந்து, தமிழர் நலன்களை கவனிப்பது இந்த அரசின் எதிர்காலத்திற்கு நல்லதாக அமையும்.

அதைவிடுத்து யார் என்ன சொன்னால் என்ன? நாம் நினைத்ததைத்தான் செய்வோம் என்று இவர்கள் அடம்பிடித்தால் இலங்கை மாதாவை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். அதை முற்கூட்டியே சொல்லிவைக்க விரும்புகிறோம்.

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



# அமெரிக்காவில் அரங்கேறும் அராஜகம்

விஸ்கான்சினின் கெனோஷாவில் ஞாயிற்றுக்கிழமை இரவு ஓர் அடையாளம் தெரியாத கெனோஷா காவல்துறை அதிகாரி, நிராயுதபாணியான மூன்று குழந்தைகளின் ஆபிரிக்க - அமெரிக்க தந்தையான 29 வயதான ஜாக்கோப் பிளேக்கை அருகில் வைத்து ஏழு முறை சுட்டதைத் தொடர்ந்து போராட்டங்கள் வெடித்தன. மூன்று, ஐந்து மற்றும் எட்டு வயதுடைய அவரது குழந்தைகள் பின்புறத்தில் அமர்ந்திருந்த தனது வாகனத்துக்குள் பிளேக் நுழைய முயன்றார்.

பல சமூக ஊடகத் தளங்களில் 24 மணி நேரத்துக்குள் மில்லியன் கணக்கான மக்கள் வீடியோவைப் பார்த்துள்ளனர். முடிவில்லாத பொலிஸ் மிருகத்தனத்தை எதிர்த்து எதிர்ப்பாளர்கள் வீதிகளில் இறங்கியதால், கெனோஷாவிலும் நாடு முழுவதிலும் சமூக கோபத்தின் ஒரு பெருவெடிப்பை கட்டவிழ்த்துவிட்டது.

மில்வாக்கியிலுள்ள Froedtert மருத்துவமனையில் அவரது மகனின் உடல்நிலை மோசமாக இருப்பதை பிளேக்கின் தந்தை திங்களன்று உறுதிப்படுத்தினார்.

மினியாபோலிஸ் பொலிஸால் ஜோர்ஜ் ஃபுளோய்ட் கொலைசெய்யப்பட்டு மூன்று மாதங்களாகிவிட்டன. இது பரந்துபட்ட பல்லின மற்றும் பல கலாசார எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டது. முதலாளித்துவ அரசியல்வாதிகளால் “கறுப்பின மக்கள் கவனிக்கப்படுவர்” என்று அறிவிக்கப்பட்டபோதிலும், சீர்திருத்த வாக்குறுதிகள் மற்றும் முழந்தாளிட்ட பொலிஸ் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கிடையில் ஒற்றுமைக்காக நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தபோதிலும், வர்க்க ஆட்சியின் ஒரு கருவியான காவல்துறையின் கொலைகள் தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாக 1,000இனை தாண்டியுள்ளது. வாஷிங்டன் போஸ்ட் இந்த ஆண்டு இதுவரை 651 அபாயகரமான துப்பாக்கிச்சூடுகளை பதிவுசெய்துள்ளது.

பிளேக்கின் துப்பாக்கிச்சூடு நடந்த சில மணி நேரங்களிலேயே விஸ்கான்சின் நீதித்துறை திணைக்களம் ஓர் அறிக்கையை வெளியிட்டது, இந்தச் சம்பவம் குறித்த அறிக்கையை 30 நாட்களுக்குள் அரச வழக்குத்தொடுனருக்கு வழங்குவதற்கான நோக்கத்துடன் அவ்வமைப்பு துப்பாக்கிச்சூடு தொடர்பான விசாரணையை வழிநடத்தும் என்று அறிவித்தது. “எது பற்றி குற்றச்சாட்டுகள், குற்றச்சாட்டுகள் பொருத்தமானவை என்றால் வழக்குத்தொடுனர் ஒரு தீர்மானத்தை எடுப்பார்'' என்றது.



ஓகஸ்ட் 23, 2020 அன்று விஸ்கான்சினின் கெனோஷாவில் ஜாக்கோப் பிளேக்கை பொலிஸார் சுட்டுக் கொன்ற வீடியோவின் பதிவு

அடையாளம் தெரியாத இரண்டு கெனோஷா பொலிஸ் அதிகாரிகள் நிர்வாக விடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். விசாரணையின் முடிவுகள் நிலுவையிலுள்ளன, இது சாட்சி அறிக்கைகளிலும் சமூக ஊடக ஒளிப்பதிவு காட்சிகளிலும் தங்கியிருக்கின்றது.

கெனோஷா செய்தியின்படி, உடல்கெமராக்களைப் பயன்படுத்தாத 440 சட்ட அமுலாக்க நிறுவனங்களில் நகரத்தின் காவல்துறையும் ஒன்றாகும். 2022ஆம் ஆண்டுவரை உடல்கெமராக்களைப் பெறுவதற்கு இத்திணைக்களம் திட்டமிடப்படவில்லை, மேலும் திணைக்களம் அவற்றை முறையாகப் பயன்படுத்தும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை.

ஞாயிற்றுக்கிழமை இரவு, ஜனநாயகக் கட்சி ஆளுநர் டோனி எவர்ஸ் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இது திங்களன்று செய்தியாளர் சந்திப்பின்போது லெப்டினன்ட் கவர்னர் மண்டேலா பார்ன்ஸினால் எதிரொலிக்கப்பட்டது. அது பொலிஸ் வன்முறையின் வர்க்கத்தன்மையை மூடிமறைக்கவும், துப்பாக்கிச்சூட்டை இனரீதியாகவும் முன்வைக்க முயன்றது, “இனவெறி எங்கள் மாநிலத்திலும் எங்கள் நாட்டிலும் உள்ளது” என்று குற்றஞ்சாட்டியது.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் நவீன அமெரிக்க குற்றவியல் நீதி அமைப்பின் முன்னணி காரணகர்த்தாவுமான ஜோ பைடன், இந்த ஆண்டின் தொடக்கத்தில் முடிவில்லாத பொலிஸ் கொலைக்கு ஒரு தீர்வாக “இதயத்துக்குப் பதிலாக காலில் சுடுங்கள்” என்று பரிந்துரைத்தார். அதேபோல் “முழு மற்றும் வெளிப்படையான விசாரணை” மற்றும் “முறையான இனவெறியை அகற்றுவதற்கான” முயற்சிகளுக்கும் அழைப்புவிட்டார்.

பொலிஸ் பயங்கரத்தின் தொற்றுநோயைத் தடுக்க எதுவும் செய்யாத ஒன்றான கோடைக்காலத்தில் எவர்ஸினால் முன்மொழியப்பட்ட தொடர்ச்சியான மசோதாக்கள் பற்றி முடிவெடுக்க ஓகஸ்ட் 31 அன்று சட்டமன்றத்தின் சிறப்பு அமர்வைக் கூட்டக் கோரி எவர்ஸ் ஒரு நிர்வாக உத்தரவைப் பிறப்பித்தார். இந்த நடவடிக்கைகள், ‘மாநிலம் தழுவிய பலாத்காரத்தைப் பயன்படுத்துவதற்கான கொள்கை’, ‘கழுத்துப்பிடிகளுக்கு தடை மற்றும் மேலதிக மோதல் தவிர்ப்பு’ பயிற்சிக்கு அழைப்பு விடுக்கின்றன.

அதேநேரத்தில், விஸ்கான்சின் தேசிய காவல்படையிலிருந்து 125 பேரை கெனோஷாவுக்கு “உள்கட்டமைப்பை பாதுகாப்பதற்காகவும், எங்கள் தீயணைப்பு வீரர்களும் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்காகவும்” அனுப்பப்பட்டதாக எவர்ஸ் அறிவித்தார். ‘மற்றவர்கள்’ என்று அவர் காவல்துறையினரைத்தான் குறிப்பிடுகிறார். ஊரடங்கு உத்தரவை மீறும் போராட்டக்காரர்களை அடக்குவதற்கும் கைது செய்வதற்கும் இராணுவம் காவல்துறைடன் நெருக்கமாக செயற்படும்.

வேலையின்மை விகிதம் 9.9 சதவிகிதமாகவுள்ள தென்கிழக்கு விஸ்கான்சினில் வறிய நிலையிலுள்ள தொழிற்றுறை அழிக்கப்பட்ட நகரத்தில் பதற்றங்கள், திங்களன்று நாள்முழுவதும் கத்தியின் விளிம்பில் இருந்தது. நகரத்தின் பொது பாதுகாப்புக் கட்டிடத்தில் மேயர் ஜோன் அன்டாராமியனுடன் மதியம் செய்தியாளர் சந்திப்புக்குப் பின்னர், பொலிஸ் மிருகத்தனத்தின் மற்றொரு காட்சியாக அவ்விடம் மாற்றப்பட்டது. செய்தி மாநாடு முடிந்ததாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் கட்டிடத்துக்குள் நுழையக் கோரிவந்த ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகத்தின் உறுப்பினர்களின் கூட்டத்தை கலகம் அடக்கும் பொலிஸார் மிளகு கண்ணீர்ப்புகை தெளித்து கலைத்தது.

திங்கட்கிழமை மாலை பின்னர், கலவரக் காவலில் இருந்த பொலிஸார், இரவு 8 மணிக்குப் பின்னர் நகரின் நீதிமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த எதிர்ப்பாளர்கள் மீது கண்ணீர்ப்புகை, இரப்பர் தோட்டாக்கள் மற்றும் மிளகு பந்துகளை வீசினர். ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வந்தது. காவல்துறைக்கு உதவியளிக்க தேசிய காவலர்களின் கவச வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை சூட்டுக்கு வழிவகுத்த நிகழ்வுகள் இன்னும் மூடிமறைக்கப்பட்டு காணப்படுகின்றன. ஏனெனில், அதிகாரிகள் உத்தியோகபூர்வ நியாயப்படுத்தலை உருவாக்கி பொதுமக்களின் கோபத்தை கலைக்க முற்படுகிறார்கள். இதில் தெரிந்த விடயம் என்னவென்றால், நகரின் வடக்குப் பகுதியில் 40ஆவது தெரு மற்றும் 28ஆவது அவென்யூவின் மூலையில், மாலை 5.11 மணியளவில் சூடு நடந்தது. மாநில காவல்துறை அதிகாரிகளின் கூற்றுப்படி, ஓர் “உள்ளூர் சம்பவத்திற்கு” பதிலளிக்கும் வகையில் பொலிஸார் அனுப்பப்பட்டனர். இருப்பினும், காவல்துறையை அழைத்தவர் யார் என்பது தற்போதும் தெளிவாகத் தெரியவில்லை. காவல்துறையினர் பிளேக்குடன் ஏன் தொடர்புகொண்டனர் என்பதும் தெரியவில்லை.

சாட்சிகளும் பிளேக்கின் வழக்கறிஞருமான பெஞ்சமின் க்ரம்ப், பாதுகாப்புக் காவலராகப் பணியாற்றும் பிளேக், வயதுவந்த இரண்டு பெண்களுக்கிடையிலான சண்டையை விலக்க முயன்றதாக சாட்சியமளிக்கின்றனர். தனது மகள்களுடன் அருகில் வசிக்கும் ஸ்டெல்லா லண்டன், இந்தச் சம்பவம் ஒரு கீறப்பட்ட கார் தொடர்பாக ஆரம்பித்தது என்றும், காவல்துறையினருக்கு அதை காட்டியதும், பிளேக்தான் பிரச்சினை என்று அவர்கள் கருதினார்கள் என்றும் அவர் வாஷிங்டன் போஸ்ட்டுக்கு கூறினார்.

ABC7 உடன் பேசிய லா-ரான் பிராங்க்ளின், சில பெண்கள் சண்டையிடுவதை கண்டதாகக் கூறினார். பிராங்க்ளின் பின்னர் “ஒரு மனிதர் சண்டையை விலக்க முயன்றார். அவர் தனது குழந்தைகளை நோக்கி திரும்பியபோது, அதிகாரி இந்த நபரை ஏழு முறை சுட்டார்” என்றார்.

பிளேக்கின் வருங்கால மனைவி லெக்யூஷா பூக் (Laquisha Booke), பிளேக் நிராயுதபாணியாக இருந்ததாக கூறினார். “ஆயுதம் இல்லாத அதுபோன்ற ஒருவரை இவ்வாறு நடத்துவதில் அர்த்தமில்லை, பின்னாலுள்ள குழந்தைகள் கத்திக்கொண்டிருக்கிறார்கள்” என்று அவர் கூறினார்.

துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து, உள்ளூர் பொலிஸ் நிலையத்தை நோக்கி அணிவகுத்துச் செல்லும்போது, துப்பாக்கிச்சூடு நடத்தியவரை கைதுசெய்யக் கோரிய நூற்றுக்கணக்கானவர்களின் முன்னால் பின்வாங்க வேண்டிய கட்டாயத்திலிருந்த அதிகாரிகளைச் சுற்றி ஒரு கூட்டம் விரைவாகக் கூடியது.

பொலிஸ் நிலையத்திற்கு வந்ததும், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பல்லின ஆர்ப்பாட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு கட்டளையிட்டனர். பின்னர் இரப்பர் தோட்டாக்கள் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளுக்கு முகங்கொடுத்தனர். போராட்டக்காரர்களின் பாதையைத் தடுக்க குப்பை வாகனங்களைப் பயன்படுத்த பொலிஸார் முயன்றனர். இருப்பினும், இரவானதும் இவ்வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கெனோஷா கவுண்டி பொது பாதுகாப்புக் கட்டிடத்திற்கு வெளியே தெருக்களில் தங்கியிருந்தபோது, இரவை “நீதி இல்லை, அமைதி இல்லை” என்ற கூக்குரல்களால் நிரப்பினர்.

அவசரமாக இரவு 10.15 மணி திணிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமை இரவு ஊரடங்கு உத்தரவை மீறி நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் வீதிகளில் தொடர்ந்திருந்தனர். இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தும் முயற்சியில் SWAT குழுக்கள், கலகமடக்கும் பொலிஸார் மற்றும் நகர்ப்புற தாக்குதல் வாகனம் ஆகியவை நிறுத்தப்பட்டன. பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் இரப்பர் தோட்டாக்களை இரவு ஒரு மணிக்குப் பின்னரும் அணிவகுத்துச் சென்றோர் மீது சுட்டனர்.

கெனோஷாவைத் தவிர, வார இறுதியில் பல அமெரிக்க நகரங்களில் பொலிஸ் வன்முறைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் விஸ்கான்சினில் மாடிசன், கென்டக்கி இல் லூயிஸ்வில், மிச்சிகனில் டெட்ராய்ட், ஒரிகான் இல் போர்ட்லாண்ட், லூசியானாவில் லாவாயட் ஆகியவை அடங்கும். 31 வயதான ட்ரேபோர்ட் பெலரின் (Trayford Pellerin) ஒரு ஷெல் எரிவாயு நிலையத்திற்கு வெளியே லூசியானா மாநில பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். பெலரின் எரிவாயு நிலையத்துக்குள் நுழைய முயன்றபோது பல பொலிஸ் அதிகாரிகள், அவர் மீது 11 தடவைகள் சுட்டார்கள்.



*Jacob Blake [இடது]*
*[நன்றி: The Office of Ben Crump]*

கையில் கத்தியுடன் ஒருவர் சுற்றி நடந்துவருவதாக தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். ஒரு கைப்பேசி ஒளிப்பதிவில், காவல்துறையினர் நடந்தும் வாகனங்களிலும் பின்தொடரும்போது பெலரின் எரிவாயு நிலையத்தை நோக்கி நடந்து செல்வதைக் காணலாம். பெலரின் கதவை அடையும்போது, பல ஆயுதங்களிலிருந்து குண்டுகள் சுடப்படுகின்றன.

சுட்டதை படம்பிடித்த ரிக்காஷா மொண்ட்கோமெரி, பெலரின் சுடப்படுவதற்கு முன்பு ஒரு மின் அதிர்ச்சிக் கருவியால் பொலிஸ் தாக்கியதை கண்டதாகக் கூறினார். பிளேக் மீதான துப்பாக்கிச்சூட்டைப் போலவே, அதிகாரிகளை எதிர்கொண்ட எவருமே மிகக் குறைந்த உடல் ரீதியான அல்லது வன்முறையை சந்திக்கவில்லை. ஆனாலும் இருவருமே கொலைகார பலத்தைச் சந்தித்தனர்.

சூட்டைப் பற்றிய செய்தி பரவியதால், லூசியானாவின் நான்காவது பெரிய நகரத்தில் வார இறுதி மற்றும் திங்கள் வரை போராட்டங்கள் நடந்துள்ளன. கலவரக் கவசங்களை தலைமுதல் கால்வரை அணிந்துகொண்டு, அணிவகுப்பாளர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகள் மற்றும் புகைக் குண்டுகளை வீசத் தொடங்கிய பொலிஸாரின் கலைந்துபோகுமாறு கூறிய உத்தரவுகளை மறுத்த மூன்று எதிர்ப்பாளர்கள் சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை மாலையில், கிட்டத்தட்ட 200 ஆர்ப்பாட்டக்காரர்கள் லாஃபாயெட் நகர மன்றத்தில் இறங்கி, “திரும்பிப் போ, சுட வேண்டாம்!” என்று கோஷமிட்டனர்

நன்றி : சோஷலிச இணையதளம்

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



நண்பர் ஒருவரை நேற்றுக்காலை கடைத்தெருவில் கண்டேன். முக்கியமான தகவல் ஒன்றை சொன்னார். பேஸ்மாஸ்க் எனப்படும் முகக்கவசங்களை பாவித்துவிட்டு வீசும்போது அதை இரண்டாக வெட்டி வீசும்படி கேட்டுக்கொண்டார். ஏன் என்று வினவினேன். இப்படி வீசும் பேஸ் மாஸ்க்குகளை சேகரிக்கும் சிலர் அதனை சுத்தப்படுத்தி குறைந்த விலைகளில் ஏழை மக்களுக்கு விற்கிறார்களாம். ஏற்கனவே பாவித்தவருக்கு இருக்கும் நோய்த்தொற்றுகள் பரவலாம் என்று விளக்கமளித்தார் நண்பர்...

அப்படியோ? இந்தக் கொடுமை வேறு நடக்கிறதா? சரி இப்படி மாஸ்க்கை வெட்டிவிட ஓரிரு நிமிடங்கள் கூட செல்லாதே... நாமும் இப்படி வெட்டிவிட்டு வீசிவிடுவோம் என்று மனதுக்குள் நினைத்தேன்... நீங்களும் செய்யுங்கள்... இப்படிச் செய்வதால் யாரோ ஒருவருக்கு நாம் மறைமுக உதவியை செய்கிறோம்..!

- சிவா -
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





# கித்துள் மற்றும் பனையை பிரதான ஏற்றுமதி பயிர்களுடன் சேர்க்க ஜனாதிபதி பணிப்புரை!

★ மண்சரிவு பிரதேசங்களில் கித்துள் பயிர்ச்செய்கை

★ பனை மரங்களை வெட்டுவதை தடுப்பதற்கான கடுமையான சட்டம்

★ இரண்டு மில்லியன் வீட்டுத் தோட்டங்களுக்கு 4 மில்லியன் தென்னங்கன்றுகள்

★ பள்ளமான பிரதேசங்களில் பைனஸ் மரத்துக்குப் பதிலாக இறப்பர்

கித்துள் மற்றும் பனையை பிரதான ஏற்றுமதிப் பயிர்களுடன் சேர்த்து அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறையொன்றை ஆரம்பிப்பதற்கான இயலுமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கித்துள் மற்றும் பனை பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றுக்கான தடைகளை நீக்கி உற்பத்தி செயற்பாட்டை ஊக்கப்படுத்துவதற்கும் உடனடியான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதன் அவசியத்தை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். கித்துள் பயிருக்காக அரச நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கும் பனை மரம் வெட்டுவதை தடைசெய்யும் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.



தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்விடயங்களை சுட்டிக்காட்டினார்.

அதிக அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ள இராஜாங்க அமைச்சாக இவ்வமைச்சின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, குறுகிய காலத்தில் அடைந்துகொள்ளவேண்டிய இலக்கை தயார்செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். வருடாந்த உள்நாட்டுத் தேங்காய் உற்பத்தி 3 பில்லியன்களாகும். அதில் 1.8 பில்லியன்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிக ஏற்றுமதிக்காக பயிரிடுவதை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட இனங்காணப்பட்டுள்ள காணிகளில் உடனடியாக தென்னை பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. காணி பயன்படுத்தல் திணைக்களத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ள கைவிடப்பட்ட வயல் நிலங்களும் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படும். செப்டெம்பர் மாதத்தில் 2 மில்லியன் வீட்டுத் தோட்டங்களுக்கு 4 மில்லியன் தென்னங்கன்றுகளை பயிரிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ இங்கு குறிப்பிட்டார்.

தேங்காய்க்கான நிர்ணய விலை தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது. கலப்பின விதைகளை பயிரிடுவதன் மூலம் கூடிய விளைச்சலை பெற்றுக்கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டது. இறப்பர் ஏற்றுமதியால் வருடாந்தம் பெறும் வருமானம் 600 மில்லியன் டொலர்களாகும். அதனை 2020ஆம் ஆண்டில் 2,000 மில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இறப்பர் பயிர்ச்செய்கையில் புதிய இனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் பள்ளமான பிரதேசங்களில் பைனஸ் மரத்துக்குப் பதிலாக இறப்பர் மரங்களை பயிரிடுதல் தொடர்பாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டு இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக இறப்பர் இறக்குமதியை கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். இறப்பர் சார்ந்த உற்பத்தி நிறுவனங்கள் உள்நாட்டிலிருந்து கொள்வனவு செய்யும் இறப்பர் தொகைக்கு இணையாக இறப்பர் இறக்குமதிக்கும் பொறிமுறையொன்றை திட்டமிட வேண்டுமென்று பசில் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார். ஏற்றுமதிசெய்யப்படும் கேப் இறப்பர் ஏனைய நாடுகளின் உற்பத்திகளுக்காக பயன்படுத்தும் வழிமுறையை கண்டறிவதன் முக்கியத்துவம் பற்றியும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர உள்ளிட்ட அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள் நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பயிர்ச்செய்கை, உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# வல்லையில் இழுவைப் படகு மீன்பிடி விவகாரம்; தீர்த்துவைக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை!

வடமாராட்சி வல்வெட்டித்துறை பிரதேச கடற்றொழிலாளர்கள் இழுவைப் படகுகளை பயன்படுத்தத் தகுந்த சேற்றுப்படுகைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கமைய 'நாரா' எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள் குறித்த ஆய்வு நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

குறித்த ஆய்வுப் பணிகள் நிறைவடைந்து 'றோலர்' எனப்படும் இழுவைப் படகுகளை பயன்படுத்தக்கூடிய கடற்பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டதும் இதுவரை வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர்கள் மத்தியில் நிலவிய இழுவைப் படகு தொழில் தொடர்பான முரண்பாடுகள் முற்றுப்பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை பிரதேச கடற்றொழிலாளர்களில் ஒரு பகுதியினர் 1978 – 1989ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆண்டு முழுவதும் இரவுநேரத்திலும் பின்னர் 1990 – 2011 வரையான காலப்பகுதியில் பகல் நேரத்திலும் இழுவைப் படகு மீன்பிடியில் ஈடுபட்டுவந்தவர்களாவர்.

இருப்பினும் 2011 ஆண்டிலிருந்து, ஆவணி - பெப்ரவரி வரையான காலப்பகுதியில் காலை 6 மணியிலிருந்து மாலை 4 மணி வரை மாத்திரமே குறித்த தொழிலில் ஈடுபட்டுவந்த நிலையில், இழுவைப் படகு மீன்பிடி முறையால் கடல் வளம் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டதன் காரணமாக 2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இழுவைப் படகு தடைச்சட்டத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்ட சேற்றுப்படுகைகள் நிறைந்த பிரதேசத்தில் மாத்திரமே இழுவைப் படகுகள் பயன்படுத்தப்பட முடியும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

எனினும், வல்வெட்டித்துறையில் இழுவைப் படகுகள் பயன்படுத்தக்கூடிய சேற்றுப்படுகைகள் அடையாளப்படுத்தப்படாத நிலையில், குறித்த பிரதேசத்தில் தற்போது சுமார் 40 இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி சுமார் 160இற்கும் மேற்பட்டவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையைப் பயன்படுத்துவதனால் தமது கடல் வளம் பாதிக்கப்படுவதாக குறித்த பிரதேசத்தை சேர்ந்த ஏனைய கடற்றொழிலாளர்களும் கடற்றொழிலாளர் சங்கங்களும் குற்றஞ்சாட்டி வருவதுடன் எதிர்ப்பும் வெளியிட்டு வருகின்றன. இதனால் இரண்டு தரப்பினருக்குமிடையில் முரண்பாடுகளும் தோன்றியுள்ளன.

இதனையடுத்து குறித்த விவகாரம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்துக் கலந்துரையாடிய அமைச்சர் சட்ட ரீதியாக தடைசெய்யப்பட்ட தொழில் முறையாக இருக்கும் இழுவைப் படகு மீன்பிடியை உடனடியாக நிறுத்துமாறும் குறுகிய காலப்பகுதிக்குள் நாரா நிறுவனத்தின் ஊடாக இழுவைப் படகு பயன்படுத்தக்கூடிய பிரதேசத்தை அடையாளப்படுத்தி தருவதாகவும் உறுதியளித்திருந்தார்.

அதனடிப்படையில் 'நாரா' எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தினால் குறித்த ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இன்னும் சில தினங்களுக்குள் ஆய்வுப்பணிகள் நிறைவடைந்து இழுவைப் படகுகள் பயன்படுத்தக்கூடிய பிரதேசங்களை அடையாளப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



**பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வுபெற்ற) நேற்று பாதுகாப்பு அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.**



**வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற வெல்லே சாரங்கவிடம் பொலிஸ் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் அவிசாவளை வீதி வெல்லம்பிட்டியவை சேர்ந்த இஷார என்பவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து மூன்று கிலோ கேரள கஞ்சா, இரண்டு வாகனங்கள், கைத்தொலைபேசிகள், வங்கிக் கணக்குப் புத்தகங்கள் என்பன மீட்கப்பட்டன. நவகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர்.**

# தொழிலாளர் சட்டதிட்டங்களில் திருத்தம்

**– வரைபை ஒருவாரத்துக்குள் கையளிக்குமாறு தொழிலாளர் அதிகாரசபைக்கு ஆலோசனை**

தொழிலாளர் சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி, பல்வேறு சட்டதிட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அதற்கமைய ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்டத்துடன் தொடர்புடைய ஒதுக்கீட்டு நிதியை செலுத்தாமை தொடர்பான வழக்குகளை தொழிலாளர் தீர்ப்பாயம் சபை தொடர்வதற்காக இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும், தொழிலாளர் தீர்ப்பாயம் சபைக்கு வழங்கப்படும் முறைப்பாடுகளுக்காக தீர்வுகளை அந்தச் சபையிலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சட்ட திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறே, சேவைக்கால கொடுப்பனவு சட்டதிருத்தங்களை முன்னெடுத்து அந்தக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய வழக்குகள் தொழிலாளர் தீர்ப்பாயம் சபையில் விசாரிக்கப்படும். அதேபோன்று தொழிற்சங்கங்கள் மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நீண்டகால கோரிக்கையான சேவையாளர் நிவாரண கட்டளைச்சட்டத்துக்கமைய தற்போதுவரையில் செலுத்தப்பட்டிருக்கும் 5 இலட்சத்து 50 ஆயிரம் நிவாரணத்தை 20 இலட்சம் ரூபா வரையில் அதிகரிப்பதற்கும், அந்த நிவாரணம் சம்பந்தமான வழக்கு விசாரணை செய்யும் அதிகாரம் தொழிலாளர் தீர்ப்பாயம் சபையிடம் வழங்குவதற்கு சட்டதிருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துள்ள அவர், இந்த சட்டதிருத்தங்கள் தொடர்பான வரைபை ஒருவாரத்துக்குள் அமைச்சின் செயலாளரிடம் கையளிக்குமாறு தொழிலாளர் ஆணையாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# ஏற்றுமதி விவசாயத்துறையின் அபவிருத்திக்கு மூன்றாண்டு தேசிய வேலைத்திட்டம் விரைவில்

**– மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு**



நாட்டின் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக மூன்று வருடத்துக்கான தேசிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுமென்றும் ஏற்றுமதி பொருட்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படுமென்றும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி விவசாயப்பொருட்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட தற்போதைய அரசாங்கம் விசேட கவனம் செலுத்திவருவதாகவும் விவசாயம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதுடன், அரச நிறுவனங்கள் தனித்தனியாக சுயாதீனமாக இயங்குவதால் மேலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி மாவட்டத்தின் விவசாய செயற்பாடு களுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள் தொடர்பில் ஆய்வுசெய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது;

எமக்கு தொழில்நுட்பம், நிலம் அதிகாரிகள் உள்ளிட்ட சகல வளங்களும் இருந்தபோதிலும் முகாமைத்துவத்தில் பிரச்சினை உள்ளது. ஏற்றுமதி விவசாயப் பொருட்களை உற்பத்திசெய்யும் துறையை மேலும் வலுப்படுத்த முடியும். அதேபோன்று, ஏற்றுமதி விவசாயப்பொருட்களை பயிரிடும் சிறு விவசாயிகள் தொடர்பில் மாத்திரமன்றி 30, 40 ஏக்கர்களில் விவசாயம் செய்யும் விவசாயிகள் இருப்பார்களாக இருந்தால் அவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும்.

ஏற்றுமதி விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக விசேடமாக தேசிய வேலைத்திட்டங்களில் உள்வாங்கப்படும். நிவாரணங்கள் தகுதியான நபர்களுக்கு வழங்கப்படுவது அவசியம். மூன்று வருடங்களுக்குள் நாட்டின் ஏற்றுமதி விவசாயத்துறையில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# எலிக்காய்ச்சலால் இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரையில் 9 மரணங்கள்:
## கடந்த வருடத்தை விட பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(இரத்தினபுரி)

இவ்வருடம் இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் மூலம் 9 பேர் மரணித்துள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார அத்தியட்சகர் லக்மால் கோணார தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றுநோய் அச்சுறுத்தல் நிலவிய காலத்தில், எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் தொடர்ந்து தகவல் தருகையில்,

2019 ஆம் ஆண்டு முதல் ஏழு மாதங்களில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,250 ஆக காணப்பட்ட போதிலும், 2020ஆம் ஆண்டு முதல் ஏழு மாதங்களில் மாத்திரம் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,085 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் பொதுமக்கள் தொழில் வாய்ப்புகளுக்கு செல்லாமல் வீடுகளில் முடங்கிக் கிடந்தமையால் பொதுமக்கள் விவசாயக் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் எலி, மாடுகள் போன்ற பிராணிகளின் எச்சங்கள் மூலம் இக்காய்ச்சல் பரவுகிறது. அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தில் விவசாய வயல்கள், கமத்தொழில் நிலங்கள் மற்றும் கைவிடப்பட்ட இரத்தினக்கல் குழிகள் ஆகியவற்றை அண்மித்த பகுதிகளில் எலிக்காய்ச்சல் அதிகமாக வருவதாக இனங்காணப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட PCR பரிசோதனையில் மஸ்கெலியா, நோர்வூட், நல்லதண்ணி பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என 53 பேர் பரிசோதிக்கப்பட்டனர். (மஸ்கெலியா)


# மாகாண சபைத் தேர்தலில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மகளான விஜயலட்சுமி தொண்டமான் போட்டியிடவுள்ளார் என்பது போலியான தகவல்:
## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு

(தலவாக்கலை)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மகளான விஜயலட்சுமி தொண்டமான் போட்டியிடவுள்ளதாக நேற்று முன்தினம் வெளியாகியுள்ள போலியான தகவலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிராகரித்துள்ளது.

இலங்கையில் அடுத்து நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மகள் விஜயலட்சுமி, மத்திய மாகாணத்தில் போட்டியிடவுள்ளார் என ஊடகங்கள் இன்று செய்தி வெளியிட்டுள்ள நிலையிலேயே அதற்கு மறுப்புத் தெரிவித்து இ.தொ.கா.வால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"விஜயலட்சுமி தொண்டமானின் அரசியல் பயணம் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல் உண்மைக்குப் புறம்பானதாகும். இ.தொ.கா.வுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே இவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் போலி தகவல் பரப்பப்பட்டுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.



மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவித்தல் இன்னும் வெளியாகவில்லை. அது தொடர்பில் இ.தொ.கா. எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை. எனவே, போலியான தகவல்களை நம்பவேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். உரிய நேரத்தில் - உரிய முடிவுகளை எடுத்து, உரிய வகையில் மக்களுக்கு அறிவிக்கும் அரசியல் இயக்கமே இ.தொ.கா.வாகும்" - என்றுள்ளது.

# கொரோனா கட்டுப்படுத்தலுக்கு உதவியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(கண்டி)

கண்டி மாவட்டத்தில் முதலாவது கொரோனா நோயாளி கண்டுபிடிக்கப்பட்டது முதல் இதுவரை சுமார் ஆறுமாத காலமாக அக்குறணை பிரதேசத்தில் எதுவித நோய்ப் பரவலின்றி தொற்றைக் கட்டுப்படுத்த உதவிய சகல அரச உத்தியோகத்தர்களையும் பாராட்டும் வைபவமொன்று அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முஸ்லிம் மக்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அளவத்துகொட, ரம்புக்எல்ல என்ற இடத்திலுள்ள முஸ்லிம் பள்ளியில் இது ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இவ்வைபத்தில் அக்குறணை கொணகல்களை ஸ்ரீ விஜித மகா விகாரையின் பிரதம குருவான சங்க நாயக்கர் கொணகல்கலை உதித்த ஹிமி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

அக்குறணை பிரதேச செயலாளர் திருமதி இந்திகா குமாரி அபேசிங்க, சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சஞ்ஜீவ குருந்துகஹமட, அளவத்துகொட பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தென்னகோன், பிரதேச கிராம அதிகாரி ஆகியோர் உட்பட இன்னும் பலர் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

# பசறையில் ஹெரோயினுடன் நால்வர் கைது!

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை - செங்கலடி வீதியின் 13 ஆம் கட்டை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பசறை பொலிஸாருக்குக் கிடைத்துள்ள இரகசிய தகவலொன்றை அடிப்படையாகக்கொண்டு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டபோதே மேற்படி சந்தேகநபர்கள் போதைப்பொருளுடன் பசறை பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொலிஸ் அதிகாரி அஞ்சுல இஷார குமார தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி கோஹகொட திண்மக்கழிவு மேட்டை நிர்வகிக்க நடவடிக்கை

(கண்டி)

கண்டி மாநகர சபையால் நிர்வகிக்கப்படும் கண்டி கோஹகொட திண்மக்கழிவு மேட்டை நிர்வகிக்க புதிதாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டியிலுள்ள ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அதிகாரிகளுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

திண்மக்கழிவு மேட்டை நிர்வகிக்கும் ஒப்பந்தம் மீறப்பட்டதால் மேற்படி பணிகள் பயனற்றதாகியுள்ளதாக மாநகர சபை அதிகாரிகள் ஆளுநருக்கு தெரிவித்தனர்.

அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் தேவையான அனுமதியைப்பெற்று உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் ஆளுநர் அங்கு தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, உள்ளூராட்சி ஆணையர் மேனகா ஹெரத், கண்டி மாநகர ஆணையாளர் சந்தன தென்னகோன் மற்றும் கண்டி நகராட்சி மன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்துகொண்டனர்.




# பாடசாலை மாணவனை காலால் உதைத்த அதிபர்:
## வெலிஓயாவில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்!

(ஹட்டன்)

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட ஹட்டன் வெலிஓயா மலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவனை பாதணி காலால் எத்தி தலைப்பகுதியை சுவரில் தாக்கிய குற்றச்சாற்றுக்கு எதிராக பாடசாலைக்கு முன்பாக பெற்றோர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கடந்த வியாழக்கிழமை ஜெயபிரகாஷ் என்ற மாணவன் தாக்கப்பட்டு வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குறித்த சிறுவன் வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு ஹட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த மாணவனுக்கு ஏற்பட்ட நிலை இனி எந்தவொரு மாணவனுக்கும் ஏற்படக்கூடாது என வலியுறுத்தியும் மலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் சிவப்பிரகாசம் பாடசாலைக்கு வரக்கூடாது, பெற்றோரையும் மாணவர்களையும் மதிக்கத்தெரியாத அதிபர் வேண்டாம் மற்றும் கல்வி அமைச்சர் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன் கோஷம் எழுப்பினர்.

# கண்டி அங்கும்புரவில் பூக்கன்றுகளுடன் கஞ்சா செடி வளர்த்தவர் கைது

(கண்டி)

கஞ்சா செடியின் தோற்றத்தைக் கொண்ட 'தஹஸ்பெத்தியா' என்ற பூக்கன்றுகளுடன் கஞ்சா செடியை வளர்த்த சந்தேகநபர் ஒருவரை கண்டி அங்கும்புற பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

அங்கும்புர, எகொடமுல்ல மெதஎல என்ற இடத்தில் சட்டவிரோதமான முறையில் மது தயாரிப்பதாக கிடைத்த தகவல் தொடர்பாக பொலிஸார் அங்கு சென்று மேற்கொண்ட சோதனையின்போது பூக்கன்றுகளுடன் கஞ்சா செடியை வளர்த்துள்ளமையைக் கண்டுபிடித்துள்ளனர்.



இவ்வாறு பூக்கன்றுகளுடன் நன்கு செழித்து வளர்ந்துள்ள 14 கஞ்சா செடிகளையும் 4,500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு தயாரிக்க பயன்படும் கோடா என்ற திரவம் 6 ஆயிரம் மில்லி லீற்றர் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபரை கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

# ஹட்டன் – டிக்கோயா வர்த்தக நிலையத்தில் கொள்ளை:
## சி.சி.டி.வி.யில் சிக்கினார் சந்தேகநபர்

(ஹட்டன்)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன்-டிக்கோயா நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் 30 ஆயிரம் ரூபா பணமும் ஒரு தொகை சிகரெட்டுகள் மற்றும் மீள்நிரப்பும் அட்டைகள் என்பவற்றை கொள்ளையிட்ட சந்தேகநபரை சி.சி.டி.வி. கெமராவின் உதவியோடு கைதுசெய்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் வர்த்தக நிலையத்தை திறந்து வைத்துவிட்டு வீட்டின் சமையலறை பக்கம் சென்றவேளை வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த சந்தேகநபர் பணம், மீள்நிரப்பும் அட்டைகள், சிகரெட்டுகள் என்பவற்றை கொள்ளையிட்டுத் தப்பிச்சென்றுள்ளார். அதனையடுத்து, சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைபாடொன்று பதிவுசெய்யப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். அதன்படி, வர்த்தக நிலையத்திற்கு அருகாமையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கெமரா பரிசோதிக்கப்பட்டபோது கொள்ளையிடும் காட்சி அதில் பதிவாகியிருந்தமை தெரியவந்தது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் மாலை வேளையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒருதொகை மீள்நிரப்பும் அட்டைகள் மற்றும் ஒரு தொகை சிகரெட்கள் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர். இதேவேளை, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சாமிமலை மானிலு தோட்டப்பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலை படுத்துவதற்கான நடவடிக்கையை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டதோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பலாங்கொடை மெத்தகந்த லயன் குடியிருப்பு:
## 6 வருடங்கள் கடந்தும் பாதுகாப்பான தங்குமிட வசதியின்மையால் மக்கள் அதிருப்தி

பலாங்கொடை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மெத்தகந்த தோட்டத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த கடும் மழையால் அத்தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பொன்றுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

6 வருடங்கள் கடந்த நிலையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகள் எதுவும் இதுவரையில் உரிய அதிகாரிகள் அமைத்துத் தரவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

லயன் குடியிருப்பில் 10 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 பேர் வாழ்ந்துவருகின்றோம். மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட மாதங்களில் மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்ட குறித்த லயன் குடியிருப்புகளிலிருந்து சுமார் 30 பேரை இரண்டு மாதகாலம் தோட்ட பாடசாலையிலும் மற்றும் ஒரு மாதம் வைத்தியசாலையிலும் தற்காலிகமாக தோட்ட நிர்வாக அதிகாரிகள் தங்கவைத்தனர்.

அவ்வாறு வைத்தியசாலையிலும், பாடசாலையிலும் தங்கியிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சில மாதங்களுக்குப் பிறகு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட வீடுகளுக்கே வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு 6 வருடங்கள் கடந்த நிலையிலும் அத்தோட்ட நிர்வாக அதிகாரிகள் தோட்டத்தில் பணிபுரியும் மூன்று குடும்பங்களுக்கு மாத்திரம் பாதுகாப்பான வீடுகளை அமைத்துத் தந்தனர். மீதமுள்ள குடும்பங்களுக்கு இதுவரைகாலமும் பாதுகாப்பான இடத்தை அமைத்துத் தரவில்லை என்றும் தோட்ட மக்கள் மேலும் தெரிவித்தனர். உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 150 ரூபா சந்தாப் பணத்தை உடனடியாக நிறுத்துங்கள்:
## பெருந்தோட்டத் தொழிலாளர்களை வடிவேல் சுரேஷ் வலியுறுத்து

பெருந்தோட்ட மக்களால் செலுத்தப்படும் சந்தாப் பணம் தவறான முறையில் கையாளப்படுவதாகவும் 150 ரூபா சந்தாப் பணம் செலுத்துவதை உடனடியாக நிறுத்துமாறும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார். அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி இன்று காணாமல் போயுள்ளது. 1,000 ரூபா சம்பள அதிகரிப்பு என்பது 5 வருடங்களுக்கு முன்னர் ஏற்புடையதாக இருந்தது. ஆனால், தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள போதிலும். இதுவரையிலும் இந்த சம்பள உயர்வு கிடைக்கப்பெறவில்லை. அதேபோன்று உயிரே போனாலும், பரம்பரை பரம்பரையாக மலையக மக்கள் அனுபவித்துவரும் காணிகளை பிறிதொருவர் அனுபவிப்பதற்கு இடமளிக்க மாட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பொய்யான வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து



பெருந்தோட்ட மக்களுக்குரிய 150 ரூபா சந்தாப்பணத்தை அந்தக் காணக்குகளில் சேமித்து, சந்தாப்பணத் தொகையினூடாக மாத்திரம் தற்போது 9 கோடி ரூபாவை நிலையான கணக்குகளில் வைத்துள்ளார். இதுதொடர்பான தகவல்கள் எமக்கு தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய அரசாங்கத்தில் 13ஆவது மற்றும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தங்கள் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், எவற்றை நீக்கப்போகிறது, எவற்றை புதிதாக சேர்க்கப்போகிறது, ஜனநாயக ரீதியில் இந்தத் திருத்தங்கள் இடம்பெறப்போகிறதா என்பதை சிறுபான்மை பிரதிநிதிகள் என்றவகையில் அவதானித்துக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே, எதிர்த்தரப்பு என்ற அடிப்படையில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளோம். அவ்வாறே, தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஏதாவது திருத்தங்கள் கொண்டுவரப்படுமாயின் அதனை ஜீரணித்துக்கொள்ளும் சக்தி எமக்கில்லை" - என்றார்.

# ஓகஸ்ட் 31க்கு முன்னர் அரச வீடுகளை கையளிக்குக!

## அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு அறிவுறுத்தல்

அரச உத்தியோகபூர்வ வீடுகளை இதுவரையில் பொறுப்பளிக்காத முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அந்த வீடுகளை கையளிக்குமாறு அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு அறிவித்துள்ளது.

எவராவது ஓர் உறுப்பினர் அந்த உத்தியோகபூர்வ வீட்டை குறித்த காலப்பகுதிக்குள் ஒப்படைக்காவிட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அந்த அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் சட்டத்திட்டங்களுக்கமைய, சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது முதல் மூன்று மாதங்களுக்குள் அரச உத்தியோகபூர்வ வீடுகளை ஒப்படைக்கவேண்டும்.

கடந்த எட்டாவது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த பெரும்பாலான உறுப்பினர்கள் அரச உத்தியோகபூர்வ வீடுகளை கையளித்துள்ளார்கள். ஒருசிலரே இதுவரையில் அந்த வீடுகளை இன்னும் கையளிக்கவில்லை என்று அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய, ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் புதிய உறுப்பினர்களுக்கு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க உத்தியோகபூர்வ வீடுகளை பெற்றுக்கொடுக்க எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 70 பேர் உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியுள்ளதாக பொதுச் சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு தெரிவித்துள்ளது. 30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி கூறியுள்ளார். விண்ணப்பதாரர்களின் தேவை மற்றும் தூரம் ஆகிய விடயங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தற்போதுள்ள சூழ்நிலையில் 70 பேருக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதாயின் அமைச்சு பாரிய சிரமங்களை எதிர்கொள்ளும் எனவும் பொதுச் சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.



பமுணுகம பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கமைய உஸ்வெடக்கெய்யாவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது கெசல்வத்தை தினுகவின் சகாவான அஸ்வர் என்பவரின் உதவியாளர் எனக் கருதப்படும் மட்டக்குளியைச் சேர்ந்த சுரேஷ்குமார் என்பவர் 2 கிலோ 500 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா, 15 கிராம் ஐஸ், 40 கிராம் ஹெரோயின் ஆகிய போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



நீதிமன்றம் மற்றும் நீதியை நிலைநாட்டுதல் தொடர்பான துறையில் தம்முடைய நிறுவனத்தினூடாக வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடலொன்று நீதித்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளுக்குமிடையில் நீதித்துறை அமைச்சில் இடம்பெற்றபோது ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்டோரை படத்தில் காணலாம்.

# பாடசாலைகளை 2 கட்டங்களாக திறக்க நடவடிக்கை

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளையும் இரண்டு கட்டங்களாக வாரத்தில் ஐந்து நாட்களிலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய எதிர்வரும் 2ஆம் திகதி முதல் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகள் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறும். செப்டெம்பர் 8ஆம் திகதி தொடக்கம் ஆரம்பநிலை வகுப்புகள் உட்பட சகல பாடசாலைகளும் வழமைபோன்று இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த பாடசாலை கல்வி நடவடிக்கைகளை வழமைபோன்று முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதையடுத்து, கடந்த மார்ச் மாதம் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து கொரோனா வைரஸின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதையடுத்து, கட்டம் கட்டமாக பாடசாலைகயின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதேநேரம், நேரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதற்கமைய தரம் 10, 13 ஆகிய வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தினமும் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோப் – கோபா உள்ளிட்ட தெரிவுக்குழுக்களுக்கான 59 உறுப்பினர்களின் நியமனங்கள் செப்டெம்பரில்




நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களான பொது வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழு (கோப்) மற்றும் அரச கணக்குகள் தொடர்பான தெரிவுக்குழு (கோபா) ஆகியன கலைக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்தக் குழுக்களுக்கான 59 உறுப்பினர்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நியமிக்கப்படுவார்கள் என்று நாடாளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெரிவுக்குழுவே நாடாளுமன்றக் குழுக்களுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள். இந்தத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களாக ஆளும் மற்றும் எதிர்த்தரப்புகளிலிருந்து 12 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றக் குழுக்காக சகல அரசியல் கட்சிகளிலிருந்தும் உறுப்பினர்களை தெரிவுசெய்வதே தெரிவுக்குழுவின் முதல் கடமையாகும். அதன் பின்னர், அவ்வாறு தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் விபரங்களை நாடாளுமன்ற நிகழ்ச்சிநிரலில் உள்வாங்குவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எட்டாவது நாடாளுமன்றத்தை கலைத்ததோடு சகல நாடாளுமன்றக் குழுக்களும் கலைக்கப்பட்டன. நாடாளுமன்ற செயற்பாடுகளில் அந்தக் குழுக்களுக்கு விசேட பொறுப்புகள் கையளிக்கப்படும். அதற்கமைய, பொதுச் செயற்பாடுகள் தொடர்பாக கோப் மற்றும் கோபா ஆகிய குழுக்களின் தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு அந்தக் கட்சி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இதேவேளை, கடந்த எட்டாவது நாடாளுமன்றத்தில் கோப் குழுவின் தலைவராக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி, கோபா குழுவின் தவைராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன ஆகியோர் செயற்பட்டிருந்தனர்.

# இலங்கையின் ஆதிகுடிகள் தமிழ் மக்களா?



## சி.வி.விக்னேஸ்வரனை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு கம்மன்பில அழைப்பு

விக்னேஸ்வரனின் கருத்துக்கு வெறுமனே எதிர்ப்புத் தெரிவிப்பதால் மாத்திரம் அவரது கருத்து பொய்யானது என்பதை நிரூபிக்க முடியாது. பொய் என நிரூபித்தால் மாத்திரமே அந்தக் கருத்து பொய்யாக அமையும். அவர் கூறுவது, அப்பட்டமான பொய் என நிரூபிக்க நான் தயார். ஆகவே, இலங்கையின் ஆதி குடிகள் தமிழ் மக்களா என்பது குறித்து என்னுடன் விவாதிக்க வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு சவால் விடுப்பதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எனது தாய்மொழியிலும், உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் நான் எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன் என சி.வி.விக்னேஸ்வரன் அவரது நாடாளுமன்ற உரையில் சபாநாயகருக்கு வாழ்த்துக் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

நாட்டின் நல்வாய்ப்பாக சி.வி.விக்னேஸ்வரனின் கடும்போக்குவாதத்தை வடக்கு மக்கள் நிராகரித்துள்ளனர். அவருக்கு யாழ். மக்கள் 21 ஆயிரத்து 554 விருப்பு வாக்குகளையே அளித்தனர். பிரிவினைவாதத்திற்குப் பதிலாக, வடக்கு அபிவிருத்தியில் அரசாங்கத்துடன் கைகோர்த்த அங்கஜன் இராமநாதனுக்கு 36 ஆயிரத்து 365 விருப்பு வாக்குகளையும், டக்ளஸ் தேவானந்தாவுக்கு 32 ஆயிரத்து 146 விருப்பு வாக்குகளையும் வடக்கு மக்கள் வழங்கியுள்ளனர். ஆகவே, தமிழ் பிரிவினைவாதத்துடன் தொடர்ந்தும் பயணிப்பதற்கு வடக்கு மக்கள் தயாரில்லை என்பது தெளிவாகியுள்ளது.

விக்னேஸ்வரன் ஆபத்தான அறிக்கைகள் மற்றும் பொய்களைக் கூறி தமிழ் மக்களை வெல்ல முயற்சிக்கிறார். ஆனால், மக்கள் அவற்றை ஏற்கத் தயாராக இல்லை. புதிய நாடாளுமன்றத்தின் தொடக்க நாளில் அவர் கூறிய மிக ஆபத்தான பொய் என்னவென்றால், இலங்கையின் பூர்வீகக்குடி மக்கள் தமிழர்கள் என்றும், இலங்கைத் தமிழர்களால் முதலில் எழுதப்பட்ட சான்றுகள் டச்சு காலத்தில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபமாலை என்பதற்கு எந்த தொல்பொருள் அல்லது வரலாற்று ஆதாரங்களும் இல்லை.

தமிழ் உலகின் மிகப் பழைமையான மொழி தமிழ் என்று விக்னேஸ்வரன் கூறுகிறார். ஆனால், தமிழ் மொழி கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. சீன, அரபு, கிரேக்கம் மற்றும் பாஸ்க் போன்ற மொழிகள் மிகவும் பழைமையானவை. இலங்கையில் தமிழர்கள் பூர்வீகக்குடிகள் என்பதற்கான தொல்பொருள் அல்லது வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லை. டச்சுக் காலத்தில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபமாலைதான் தமிழர்களிடமுள்ள வரலாற்றுச் சான்று.

19ஆவது திருத்தத்தின்கீழ் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதியின் கீழ் வைக்கமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட அறிக்கை பொய். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக இருக்க முடியாது என்று அரசியலமைப்பு கூறும் இடத்தை அவர் சுட்டிக்காட்டவேண்டும். அரசியலமைப்பின் 4ஆவது பிரிவு 19ஆவது திருத்தத்தால் திருத்தப்படவில்லை என்றும், அதைத் திருத்தாமல் பாதுகாப்பு அமைச்சை ஒப்படைக்க முடியாது. உச்சநீதிமன்றத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.



பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிஹிரியாகம பிரதேசத்தில் கடவத்த கோனஹேன விசேட அதிரடிப்படையினாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, வீட்டு வளாகமொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கி, 45 ரவைகள், 9 மில்லி மீட்டர் நீளமுடைய 44 ரவைகள், 639 பயன்படுத்தப்பட்ட ரவை உறைகள் ஆகியவற்றுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்ப்பட்ட ஏத்தாலே பிரதேசத்தில் சுங்க வரியுடன் இறக்குமதிசெய்யப்பட்ட சந்தேகத்தில் மஞ்சள் துண்டு தொகைகள் லொரியொன்றில் எடுத்துச்செல்லப்பட்ட நிலையில், விசேட அதிரடிப்படை அதிகாரிகள், குறித்த லொரியின் சாரதியை கைதுசெய்ய முயற்சித்தபோது அவர் தப்பியோடியுள்ளார். அந்த லொரியிலிருந்து 1 கிலோ 998 கிராம் நிறையுடைய மஞ்சள் துண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# வாள்வெட்டில் இளைஞன் படுகாயம்!

தென்மராட்சி - வரணி, இயற்றாலை பகுதியில் வாள்வெட்டுக் காயங்களுடன் மயங்கிய நிலையிலிருந்த இளைஞரொருவர் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் மந்திகை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஆ.சாந்தகுமாரின் மகனான சாந்தகுமார் சதுசன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

மேசன் வேலைக்குச் செல்லும் குறித்த இளைஞன் வேலை முடிந்து பஸ்ஸில் வரும்போது வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலயப் பகுதியில் பஸ்ஸை வழிமறித்த இளைஞர்கள் ஐந்து பேர் குறித்த இளைஞனை பஸ்ஸிலிருந்து இறக்கி வாளால் வெட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கைவிரல் இரண்டும் துண்டாடப்பட்ட நிலையில், வலக் காலிலும் வாள்வெட்டுக்கு இலக்காகி மந்துவிலுக்குச் செல்லும் பாரதி வீதி சந்தியில் இளைஞனை கிடத்திவிட்டு குறித்த கும்பல் தப்பிச்சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சமிந்த குமார நொஹோத் ரகரா என்பவருடன் தொடர்பைப்பேணி அவருடைய வியாபார நடவடிக்கைகள் முன்னெடுத்துவந்த மஹர சிறைச்சாலையின் மேலதிகாரியொருவர், விமானப்படை தலைமையகத்தின் சிவில் பணிக்குழுவின் சேவையாளர் ஒருவர் உட்பட நால்வர் வெயன்கொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 15 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 2 மோட்டார் சைக்கிள், 50 ஆயிரத்துக்கு அதிகமான பணம், 15 வங்கிக் கணக்குப் புத்தககங்கள், 13 ஏ.ரி.எம். காட்கள், கையடக்கத் தொலைபேசி, மின்தராசு உள்ளிட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

# பாடசாலை மாணவர்களுக்கு புதிய வகை பாக்கு விற்பனை

## - தடுத்துநிறுத்துமாறு பொலிஸாரிடம் கோரிக்கை

( திருமலை )

திருகோணமலை - ரொட்டவெவ பகுதியில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து புதியவகை பாக்கு விற்பனைசெய்யப்பட்டு வருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பத்து ரூபா விலைக்கு இப்பாக்கு பக்கெட்டுகள் விற்பனைசெய்யப்பட்டு வருவதாகவும் இதனால் மாணவர்கள் இதனை அதிகளவில் வாங்கி உண்பதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக , இவ்வகை பாக்குகள் மொரவெவ பிரதேசத்தில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அவ்வாறே கஞ்சா, ஹெரோயின் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துவருவதாகவும் எதிர்காலத்தில் முழு சிறுவர்களும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகக்கூடிய வகையில் சில்லறை கடைகளிலும் குறித்த வகை பாக்கு விற்பனைசெய்யப்பட்டு வருவதாகவும் இதனை உடனடியாக நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என இப்பகுதி பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஓட்டமாவடியில் மீனவர் ஒருவரின் 500 கிலோ மீன்கள் திருட்டு

( வாழைச்சேனை)



மீன் வளர்ப்பாளர் ஒருவரின் மீன்கள் திருடப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியைச் சேர்ந்த மீனவர் ஒருவரது மீன்களே இவ்வாறு திருடப் பட்டுள்ளன.

நிறுவனமொன்றின் உதவியுடன் ஓட்டமாவடி மூன்றாம் வட்டார ஆற்றில் கூடமைத்து கொடுவா இன மீன்களை வளர்த்து வந்துள்ள நிலையிலேயே மீனவரின் மீன்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த நபர் மீன் கூடுகளை சுத்தம் செய்ய சென்றபோதே இந்த மீன்கள் திருடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

அதில் 250 முதல் 500 கிலோ கிராம் எடைகளைக்கொண்ட சுமார் 350இற்கும் மேற்பட்ட மீன்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஓட்டமாவடி கோட்ட பாடசாலைகளில் உடற்பயிற்சிகள் ஆரம்பம்


(ஓட்டமாவடி )

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட கோறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் இடைநிறுத்தப்பட்டிருந்த உடற்பயிற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

கொவிட்-19 அச்சுறுத்தலால் பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வுகளும் கல்வியமைச்சின் கட்டளைப் பிரகாரம் தவிர்க்கப்பட்டுவந்த நிலையில், தற்போது நாட்டில் கொவிட-19 அச்சுறுத்தல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சுகாதாரத்துறை அறிவித்துள்ள நிலையில், மீண்டும் பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பகுதியளவில் நடைபெற்றுவருகின்றன .

இந்நிலையில், ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகள் அனைத்திலும் அவர்களது பாடசாலை சுமுக நிலைமைகளுக்கேற்ப உடற்பயிற்சிகள் நடத்தப்பட்டு வருவதாக அதிபர்கள் தெரிவித்து வருகின்றனர்.உடற்பயிற்சிகளை கண்காணித்தலானது ஆசிரியர்களின் நேரம் குறித்து ஒதுக்கப்பட்ட பிரதான கடமைக்கூறுகளில் ஒன்றாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மண்டூர் பிரியன் மீண்டும் சொல்லிசையில் தடம் பதிக்கின்றார்




( மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் கிராமத்தைச் சேர்ந்த சி.கே.ஆர்.பிரியன் எனும் இளைஞன், தனது இசைத்துறையை பல சவால்களுக்கு மத்தியில் 2015ஆம் ஆண்டு ஆரம்பித்து பல பாடல்களையும் வெளியிட்டு இலங்கை தமிழ் இசைத்துறைக்கு பெரும் பங்களிப்பையும் பெயரையும் பெற்றுக் கொடுத்தவராவார்.

இவர் இந்திய பிரபல பாடகி கவிதா கோபியுடன் இணைந்து "மகுடிப் பெண்" எனும் பாடலை பாடியும் உள்ளார். இந்தப் பாடல் மலேசிய திரைப்படம் ஒன்றிலும் இடம்பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். இப்பாடல் மிக விரைவில் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சொல்லிசையில் கால் பதித்த இவர், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் "நான் அடிமை இல்லை" எனும் பாடலை வெளியிட்டு வைப்பதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கின்றார்.

இப்பாடலை ஒட்டு மொத்த இசைத் துறைக்கும் சமர்ப்பணம் செய்வதாகவும் இதன்மூலம் விரைவில் இலங்கை தமிழ் இசைத்துறைக்கு அங்கீகாரம் கிடைக்கும் என நம்புவதாகவும பிரியன் தெரிவிக்கின்றார்.




# விளையாட்டுக் கழக ஒன்றுகூடல்



(ஓட்டமாவடி )

நாட்டில் ஏற்பட்டுள்ள, 'கொவிட்-19' அச்சுறுத்தல் நிலைமைகளால் விளையாட்டுக் கழகங்களின் செயற்பாடுகள் குன்றிப்போயுள்ள நிலையில், அந்த விளையாட்டுக் கழகங்களின் இயங்குநிலைகளை உயிரோட்டமாக்குவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கொரோனா காலத்தில் சிலகாலம் இயங்காமல் ஒய்வு நிலையிலிருந்த ஓட்டமாவடி கல்குடா செலன்ஞர்ஸ் விளையாட்டுக் கழகத்தை இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மேற்படி விளையாட்டுக் கழகத்தின் ஒன்றுகூடல் அண்மையில் தலைவர் கே.பீ.எஸ்.ஜப்பார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கழகத்தின் தற்காலிக செயலாளராக எம்.ஏ.அப்ரார் மற்றும் கிரிக்கெட் கழகத் தலைவராக ஏ.எல்.எம்.சதாம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

# மட்டக்களப்பு – ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னை வருடாந்த திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்





(மட்டக்களப்பு )

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆயித்தியமலை, தூய சதா சகாய அன்னையின் 66ஆவது வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.45 மணிக்கு கரடியனாறு சந்தியிலிருந்து அன்னையின் திருச்சொருபப் பவனியுடன் ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடைந்ததும் மாலை 5.30 மணிக்கு பங்குதந்தை அருட்பணி அந்தோனி டிலிமா அடிகளார் தலைமையில் கொடியேற்றப்பட்டு, முதலாம் நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழா தொடர்பான மேலதிக விபரங்கள் வருமாறு;

கொடியேற்றத்தை தொடர்ந்துவரும் நவநாட் காலங்களில் தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து திருப்பலி, மறையுரை, அன்னையின் ஆசீர் என்பன இடம்பெறவுள்ளன.

அதேவேளை, அன்னையின் திருத்தலம் நோக்கிய பாதயாத்திரையானது மட்டக்களப்பு கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினரின் நெறிப்படுத்தலுடன், எதிர்வரும் 5 ஆம் திகதி புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்திலிருந்து வவுணதீவு ஊடாகவும், செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்திலிருந்து கரடியனாறு ஊடாகவும் காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், பாதையாத்திரையன்று காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கமாட்டாது, மாறாக, பாதயாத்திரையானது திருத்தலத்தை சென்றடைந்ததும் திருத்தலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

அன்னையின் பெருவிழா சிறப்பு கூட்டுத் திருப்பலியானது எதிர்வரும் செப்டெம்பர் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புகொடுக்கப்படவுள்ளதுடன், திருப்பலியின் நிறைவில், கொடியிறக்கத்துடன் ஆலய வருடாந்த திருவிழா இனிதே நிறைவுபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளவிருக்கும் பக்தர்கள் அனைவரும் கட்டாயமாக சுகாதார முறைப்படி முகக்கவசம் அணிந்தவாறு சமூக இடைவெளி என்பவற்றைப் பேணி ஆலய நிர்வாகத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியவாறாக அன்னையின் அருளாசியை பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் மர ஆலை தீப்பற்றி முற்றாக சேதம்

( மட்டக்களப்பு )

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று புதன்கிழமை அதிகாலை மர ஆலையொன்றில் ஏற்பட்ட தீ பரவலினால்



குறித்த மர ஆலை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது. காத்தான்குடி மூன்றாம் குறிச்சி வாவிக்கரையோரம் அமைந்திருந்த மர ஆலையே தீப் பிடித்து எரிந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் குறித்த மர ஆலையில் தீப் பரவல் ஏற்பட்டுள்ளதாக அதன் உரிமையாளருக்கு கிடைத்த தகவலையடுத்து அவர் அங்கு சென்று பார்த்தபோது மர ஆலை எரிந்துகொண்டிருப்பதை கண்டுள்ளார்.

இதனையடுத்து, மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைக்கும் பிரிவினர் குறித்த இடத்திற்கு விரைந்து பொதுமக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

குறித்த மர ஆலை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதுடன், இங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதியான மரங்கள் முற்றாக எரிந்துள்ளன. அத்துடன், மர ஆலைக்குள் இருந்த ஐந்து ஆடுகள் மற்றும் கோழிகளும் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளதாகவும் மர ஆலையின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தத் தீப் பரவலால் பலலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

தீப் பரவலுக்கான காரணம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# மீராவோடை- மாஞ்சோலையில் வீடுகள் கையளிப்பு





(ஓட்டமாவடி)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் எண்ணக்கருவின் கீழ் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சமான நோக்கு' எனும் தொனிப்பொருளில் கிராமத்துக்கு ஒரு வீடு எனும் செயற்றிட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் கோறளைப்பற்று-ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மீராவோடை-மாஞ்சோலை பிரதேசத்தில் கட்டப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் கே.ஜெகநாதன், உதவி பிரதேச செயலாளர் ஏ.சீ.ஏ.அப்கர், கணக்காளர் எம்.ஐ.எஸ்.சஜ்ஜாத், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைத், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்எல்.நளீர், உதவிப் பொறியியலாளர் எஸ்.தேவேந்திரன், கிராமசேவக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வீடு நிர்மாணிக்கும் பணிக்கு மானியமாக வழங்கப்பட்ட 6 இலட்சம் ரூபா நிதியுடன் பயனாளிகளின் மூன்றரை இலட்சம் ரூபாவும் சேர்த்து இந்த வீடு கட்டிமுடிக்கப்பட்டதாக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.




# நான் மைத்ரியை காப்பாற்ற முயலவில்லை!

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை விசாரிக்கும் ஆணைக்குழுவில் புலனாய்வுப் பிரிவு முன்னாள் பிரதானி தெரிவிப்பு




உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக 2019 ஏப்ரல் 4ஆம் திகதி சர்வதேச புலனாய்வுப் பிரிவிடமிருந்து முன்கூட்டிய அறிவிப்பு விடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை பலமுறை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் அது கைகூடாத நிலையில், முன்னாள் ஜனாதிபதிக்கு அது தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை - என முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளார்.

அவரின் தொலைபேசி தரவுகளுக்கமைய பேஜெட் வீதியிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு ஏப்ரல் 5, 2019 காலை 7.59இற்கு 28 விநாடிகள், ஏப்ரல் 08, 2019 காலை 7.18இற்கு 17 விநாடிகள், ஏப்ரல் 9, 2019 காலை 8.02 இற்கு 04 நிமிடங்கள் 14 விநாடிகள், ஏப்ரல் 12, 2019 காலை 8.50இற்கு 37 விநாடிகள், அதேநாள் இரவு 08.07 இற்கு 16 விநாடிகள், ஏப்ரல் 13, 2019 காலை 6.27இற்கு 15 விநாடிகள், ஏப்ரல் 14, 2019 இரவு 9.39இற்கு 38 விநாடிகள், ஏப்ரல் 15, 2019 இரவு 7.47இற்கு 03 நிமிடங்கள் 19 விநாடிகள் அதேபோல் ஏப்ரல் 20, 2019 அன்று மாலை 6.16இற்கு 1 நிமிடம் 28 விநாடிகளில் அழைப்பு எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வேளையில், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட நாளில் அதாவது, ஏப்ரல் 21 தாக்குதலுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு மீண்டும் தொலைபேசி அழைப்பு எடுத்தீர்களா? என ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைமை நீதிபதி, நிலந்த ஜயவர்தனவிடம் வினவினார்.

அதற்குப் பதிலளித்த அவர், பெஜட் வீதியிலுள்ள அப்போதைய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்தவர்கள் அதாவது, அங்குள்ள தொலைபேசியை பார்வையிடுபவர்களால் ஓரிரு சந்தர்ப்பங்களில் மாத்திரம் அப்போதைய ஜனாதிபதியை தொலைபேசிமூலம் இணைப்பெடுத்து கொடுத்ததாகவும் கூறினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைமை நீதிபதி மீண்டும் தொலைபேசி அழைப்புகளுடன் தொடர்புடைய சிறப்பு அறிக்கையை காண்பித்து கேள்வி எழுப்பினார்.

ஏப்ரல் 4, 2019 காலை 6.50இற்கு 10 நிமிடங்கள் 40 விநாடிகள், ஏப்ரல் 8, 2019 காலை 8.12இற்கு 04 நிமிடங்கள், ஏப்ரல் 13, 2019 காலை 7.11இற்கு 09 நிமிடங்கள் 11 விநாடிகள், ஏப்ரல் 15, 2019 இரவு 7.52இறகு 05 நிமிடங்கள் 06 விநாடிகள்,

மேற்குறித்த நேரங்களில் பெஜெட் வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்திலிருந்து தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் ஆனால், அதை தான் தவறவிட்டநிலையில், அந்த அழைப்புகள் தனக்கு வந்திருக்கலாம் எனவும் அவர் பதில் வழங்கினார்.

அப்போது ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து ஜனாதிபதியைத் தவிர, வேறு யாராவது உங்களை அழைப்பார்களா? என ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த ஜயவர்தன, சிலர் தன்னை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்து அது முடியாமல்போகும் பட்சத்தில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து தொடர்புகொள்ள முயற்சித்ததாக தெரிவித்தார்.

ஏப்ரல் 4ஆம் திகதி வெளிநாட்டு உளவுத்துறை வழங்கிய தகவல்களுக்கு பின்னர் நீங்கள் பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டிருந்தீர்கள் என்ற வெளிப்பாட்டின் பின்னணியில் இந்தத் தாக்குதல் குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்று ஜனாதிபதி ஆணையத்தின் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.அதாவது, ஏப்ரல் 04 அன்று வட்ஸ்அப் செய்திமூலம் பெறப்பட்ட முதல் அறிவிப்பு குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் மேலும் அந்தத் தகவலை ஊர்ஜிதப்படுத்திய பின்னர் ஏப்ரல் 07ஆம் திகதி தேசிய புலனாய்வுத்துறைக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அதேபோல் கடந்த வருடம் ஏப்ரல் 15 அல்லது 16ஆம் திகதிகளில் தேசிய பாதுகாப்புப் பேரவை கூடியிருந்தால், முன்கூட்டியே அந்தத் தகவல் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவிக்க முடிந்திருக்கும் எனவும் ஜயவர்தன கூறினார்.

இறுதியில் அவர், “நான் யாரையும் பாது காக்கவில்லை ஐயா'' எனக் கூறியுள்ளார். அப்போது ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைமை நீதிபதி, “நீங்கள் யாரையும் பாது காப்பதாக நாங்கள் கூறவில்லை'' என்று கூறினார். அதற்குப் பதிலளித்த ஜயவர்தன “நான் மைத்ரியை பாதுகாப்பதாக சிலர் கூறுகின்றனர். நான் யாரையும் பாதுகாக்க முயலவில்லை'' என்றார்.

# சிறுபான்மை சமூக விவகாரங்களில் மென்போக்கை கடைப்பிடிக்க வேண்டும்!

## அலி சப்ரி ரஹீம் எம்.பி. அரசிடம் வேண்டுகோள்



முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு தொடர்பில் தாம் மிகவும் கவலையடைவதாகவும் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் விடயங்களில் கடும்போக்குத்தன்மையை தளர்த்தி மென்மையான பார்வையை அரசாங்கம் செலுத்தவேண்டும் எனவும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்துள்ளார்.

ஜனாஸா எரிப்பு விவகாரம் தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது;

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணையை வழங்கியுள்ளமையானது, சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் மீது கடும்போக்குத்தன்மையை பிரயோகிப்பதற்கு அல்ல.

மாறாக, நல்லதொரு மனிதாபிமானமிக்க ஆட்சியை வழங்குவதற்காகவே என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிட்ட ஏனைய பெரும்பான்மை வேட்பாளர்களை கொண்ட கட்சிக்கும் மக்கள் வாக்களித்துள்ளமையானது, இன்னும் இந்த நாட்டில் சமமான அரசியல் தீர்மானம் மேற்கொள்ளும் சுதந்திரத்தன்மை காணப்படுவதையே எடுத்துக்காட்டுகிறது.

“கொரோனா தொற்றும் முஸ்லிம் ஜனாஸாக்களின் எரிப்பும்” என்பது சுகாதார அதிகாரிகளின் தீர்மானத்தின்படி இடம்பெறுவதாக கூறப்பட்டபோதும், சர்வதேச சட்டமானது இதற்கு மாறாக இருப்பதை ஆட்சியில் இருக்கின்றவர்கள் காணாமல் இருக்கின்றார்களா? என மக்கள் கேள்வி கேட்கின்றனர்.

இதற்கு ஆட்சியாளர்கள் பதில் கூறமாட்டார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியும். முஸ்லிம்களின் ஜனாஸாக்களின் எரிப்பால், எமது உள்ளம் வெகுவாக புண்பட்டுள்ளதை இந்த அரசாங்கத்துக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எடுக்கப்பட்ட தீர்மானங்கள், மனிதர்களால் இயற்றப்பட்ட சட்டங் களுக்கமைவானதால், இது முழுமையானதொன்றாக இருக்காது என்பதனால் முஸ்லிம் ஜனாஸாக்களை எரிப்பது தொடர்பில், அரசாங்கம் மீள் பரிசோதனை செய்து, எமது தாய்நாட்டின் பற்றை மேலும், உறுதிப்படுத்துவது ஆட்சியாளர்களின் கைகளில் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அடுத்தவருடம் முதல் தாதியர் பட்டப்படிப்பு!

நாட்டில் முதலாவது தாதியர் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் கல்வி ஆண்டிலிருந்து பட்டப்படிப்பை ஆரம்பிக்கவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 17 தாதியர் கல்லூரிகளை ஒன்றிணைத்து தாதியர் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே குறிப்பிட்டார்.

தாதியர்களுக்கான பட்டப்படிப்புக்குரிய கல்வி திட்டங்களை வகுக்கும் பணிகள் நிறைவுக்கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தாதியர் பல்கலைக்கழகத்தினூடாக வருடமொன்றுக்கு 3,000 பட்டதாரி தாதியர்களை உருவாக்கமுடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளருடன் பல்கலைக்கழக மானியங்கள் இணைந்து புதிய பல்கலைக்கழகத்துக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாணவர் தொழில் வழிகாட்டல்களை கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானம்!

பாடசாலைகளில் 6ஆம் தரத்துக்கு மேற்பட்ட வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களை கட்டாயமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி மறுசீரமைப்பு மற்றும் தொலைதூரக்கல்வி தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி உபாலி சேதர குறிப்பிட்டார்.

இதனூடாக பாடசாலை கல்வியை பெறும்போதே தொழில்துறைக்கான பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்த முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளில் ஆலோசனை முறையை கட்டாயமாக்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாணவர்களிடையே காணப்படக்கூடிய உளநல மற்றும் சமூக சிக்கல்களுக்கு இதனூடாக தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே தரம் ஒன்பதில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயக் கல்வியை பூர்த்திசெய்தமைக்கான சான்றிதழை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி மறுசீரமைப்பு மற்றும் தொலைதூரக்கல்வி தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி உபாலி சேதர குறிப்பிட்டார்.





இலங்கையின் மிக உயரமான சுதைவிக்கிர விநாயகரை இராஜகோபுரமாகக்கொண்ட மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் பேராலயத்தில் விநாயகர் சதுர்த்தி விரதமும் திருவிழாவும் ஆவணி சதுர்த்தி தினமான கடந்த சனிக்கிழமையன்று காலை மஹா கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி அன்றைய தினம் இரவு வசந்த மண்டப பூஜை, சுவாமி உள்வீதி வருகையும், வெளிவீதி வருகையும் இடம்பெற்றதுடன், மறுநாள் ஞாயிறு காலை களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகருக்கு அபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து கடலில் கரைக்கப்பட்டது. ( படங்கள் :தேற்றாத்தீவு)

# வெளிநாடுகளிலிருந்து வருவோர் சுய தனிமைப்படுத்தலை மீறினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## - அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பறூஸ் நக்பர்

வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த பின்னர் தங்களின் வீட்டில் மீண்டும் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தல் செயற்பாட்டில் இருத்தல் கட்டாயமாகும். இதனை மீறுகின்றவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பறூஸ் நக்பர் தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் தங்களின் வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடும்போது, அவர்கள் இருக்கின்ற குறித்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கும், பொலிஸ் நிலையத்துக்கும் முதலில் அறிவித்தல் வழங்கவேண்டும் .

இவ்வாறு தகவலை வழங்கும்போது, தனிமைப்படுத்தல் செயற்பாட்டை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் உறுதிப்படுத்தும். அதனைத் தொடர்ந்து பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் குறித்த 14 நாட்கள் முடியும்வரை கண்காணித்து சுய தனிமைப்படுத்தல் நிறைவுற்றதன் பின்னர் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

சுகாதார திணைக்களத்தால் விதிக்கப் பட்டுள்ள சட்டதிட்டங்களை கவனத்திற்கொண்டு அவர்கள் செயற்படவேண்டும். தவறும்பட்சத்தில் சமூகத்தில் கொரோனா தொற்றை ஏற்படுத்த அவர்கள் உடந்தையாகின்றார்கள். அவ்வாறான வர்களுக்கு எதிராக சுகாதார திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற அதியுச்சபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

மேலும், கொரோனா வைரஸ் குறித்து மக் களை தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் இருக்கு மாறும் கொரோனா வைரஸ் ஆபத்து முற்றாக நீங்கிவிட்டது எனக் கருதி பொதுமக்கள் கொரோனா வைரஸ் தொடர்பான தங்கள் எச்சரிக்கையை தளர்த்தக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகள் அனைவரும் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களே என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பன்னூலாசிரியர் மதீனா உம்மா எழுதிய ஆறு நூல்களின் வெளியீட்டு விழா

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள பிரபல பன்னூல் பெண் எழுத்தாளரும், ஓய்வுநிலை ஆசிரியையுமான எம்.ஐ.எம்.மதீனா உம்மாஹ் ஆறு மாதங்களில் எழுதிய ஆறு நூல்களின் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ள து.

சம்மாந்துறை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஹமட் கியாஸ் தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வின்போது கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதன்மைப் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத் தலைவர் சாதியா பௌசர் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

மிகக் குறுகியகால இடைவெளிக்குள் நூலாசிரியரால் எழுதப்பட்ட மானிட சமூகவியல் படிப்பினைகள், ரம்மியமான வீடு, சித்திர வேலைப்பாடு உள்ளிட்ட மாணவர்களுக்கான சிங்கள மற்றும் ஆங்கில நூல்கள் அடங்கலாக மனித வாழ்வின் சமூக, சமய, கலாசார விழுமியங்கள் போன்றவற்றை நேரிய வழியில் வழிபட வைக்கும் அரிய ஆறு நூல்கள் இதன்போது வெளியிட்டு வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வரோதயநகர் சனசமூக நிலையத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க லண்டன் தெய்வதேவி அறக்கட்டளை அமைப்பால் வரோதயநகர் குளக்கோட்டன் வாசிகசாலைக்கு புத்தக அலுமாரியொன்று கடந்த செவ்வாயன்று கையளிக்கப்பட்டதை படத்தில் காணலாம். ( படம்: திருகோணமலை)

# முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிப்பு

(ஓட்டமாவடி )

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா தேர்தல் தொகுதி சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு தோல்வியடைந்த இளம் சட்டத்தரணி ஹபீப் றிபான் தனக்கு ஆதரவு வழங்கிய பிரதேசங்களிலுள்ள மக்களை சந்தித்து கொண்டது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் ஊழலற்ற நம்பிக்கையான மக்கள் தெரிவுக்காக தன்னோடு சேர்ந்து பயணிக்குமாறு வேண்டிக்கொண்டார்.

சட்டத்தரணி ஹபீப் றிபான் அதிகாரத்திலிருந்த முன்னாள் அமைச்சர் அமிர் அலியின் சொந்த



பிரதேசமான ஓட்டமாவடியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு சுமார் 9,000 வாக்குகள் அளவில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தனது நன்றிகளை தெரிவித்து வருகின்றார்.

அந்தவகையில் மாஞ்சோலை –பதுரியா மக்களை சந்தித்த ஹபீப் றிபான் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றியை தெரிவித்துக்

# கஞ்சா புகைத்த மூவர் விளக்கமறியலில்

**(கந்தளாய்)**

**திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொது இடத்தில் கஞ்சா போதைப்பொருள் புகைத்த மூவரை இம்மாதம் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.**

**ஹைரிய்யா நகர், சாபி நகர் பகுதியைச் சேர்ந்த 32, 23 மற்றும் 24 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

**குறித்த சந்தேகநபர்கள் மூதூர் பகுதியிலுள்ள பொது விளையாட்டு மைதானத்தில் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்தபோது மூதூர் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்து மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.**




# மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலாளர்களுக்கான மாநாடு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவிவுகளிலும் கடமையாற்றி வருகின்ற பிரதேச செயலாளர்களுக்கான மாநாடு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மன்முனை தென்எருவில்பற்று – களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் சேவைகளை மக்கள் கால டிக்குக் கொண்டுசெல்லும் நோக்குடன் பிரதேச செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. இதனூடாக பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதில் பிரதேச செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர் பாகவும், பிரதேச செயலகங்களில் அரசி னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவி ருத்திப்பணிகள், சமுர்த்தி கொடுப்பனவுகள், ஏனைய கொடுப்பனவுகள், காணி தொடர்பான விடயங்கள் பற்றி இங்கு ஆராயப்பட்டன.

மேலும், அவற்றை அமுல்படுத்துவதில் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள், ஆளணிப் பற்றாக்குறை, இடமாற்றம்



தொடர்பான பலதரப்பட்ட விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும் அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவால் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் இங்கு வழங்கப்பட்டன.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்ட இம்மாநாடு மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவபிரியா வில்வரத்தினத்தால் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந், காணிப்பிரிவுக்கான மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவீஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட பிரதம கண்காளர் கே. ஜெகதீஸ்வரன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திருமதி இந்திரா மேகன், மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஏ.பாக்கியராஜா மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக தினைக்களங்களின் உயரதிகாரிகள் என பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# பறங்கிமலை இராணுவ குடியேற்ற விவகாரம் ஹரீஸ் எம்.பி.யின் கவனத்திற்கு

(கல்முனை)

சம்மாந்துறை நெய்னாகாடு பறங்கிமலை பிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் இராணுவத்தின் குடியேற்றம் இடம் பெறுவதாகவும் இது தொடர்பில் அப்பிரதேச மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் குறித்து பிரதேச மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உள் ளிட்ட சம்மாந்துறை பிரதேச செயலாள ரின் கவனத்துக்கும் இந்த விடயத்தை கொண்டு வந்துள்ளார்.



மேலும், இராணுவத்தினர் மேற்கொள்கின்ற இத்திடீர் குடியேற்றம் தொடர்பிலுள்ள உண்மைத்தன்மையை அறிந்து அதற்கான முறை யான அடுத்தகட்ட நடவடிக்கைகளை தான் மேற்கொள்ளவுள்ளதாக ஹரீஸ் எம்பி மக்களிடம் உறுதியளித்துள்ளார்.

# டெங்கு ஒழிப்பு சிரமதானம்



( மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேசத்திலுள்ள ஆயித்தியமலை, மகிழவட்டவான், நரிப்புல்தோட்டம் போன்ற கிராமங்களிலுள்ள பொதுக் கட்டிட வளாகங்கள், ஆலயங்கள் போன்றவற்றில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்துடன் இணைந்ததாக மேற்படி சிரமதானப் பணிகள் வவுணதீவு பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் இங்குள்ள 24 கிராமசேவகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்போது இங்கு காணப்பட்ட புற்கள், போத்தல்கள், தகரப் பேணிகள், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்யப்பட்டது.

# யானைக் கூட்டத்தினால் போக்குவரத்து நெரிசல்

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை கல்முனை மற்றும் சவளக்கடை பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக யானைக் கூட்டங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கடந்த இரு தினங்களாக காலை முதல் இரவு வரை மேற்குறித்த பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதி களில் யானைக் கூட்டம் திடீரென உட்பிரவேசித்து அப்பகுதிகளிலுள்ள அறுவடை செய்யப்பட்ட வேளாண்மை நிலங் களை சேதப்படுத்துவதுடன், காடுகளை அண்டிய குடியிருப்புகளையும் சேதப்படுத்தி செல்கின்ற நிலைமை தொடர்கதையாக உள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு, காரைதீவு, மாவடிப்பள்ளி, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள பொது மக்களின் குடியிருப்புகள் மீது யானைகள் திடீரென உட்புகுந்து இவ்வாறு சேதங்களை விளை



வித்துள்ளன.

அத்துடன், அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியை அண்டிய காரைதீவு முச்சந் திப்பகுதி மற்றும் காரைதீவு ஊடாக மாவடிப் பள்ளியை ஊடறுத்து சம்மாந்துறை - அம்பாறையை அடைகின்ற பிரதான வீதியின் இரு மருங்கிலும் சுமார் 50இற்கும் அதிகமான காட்டு யானைகள் தத்தமது குட்டிகளுடன் தினமும் பிரதான வீதியை கடக்கின்றன.

அது மாத்திரமன்றி, இவ்வாறு பிரதான வீதியை கடப்பதற்கு முன்னர் மக்களின் அரவம், வாகனங்களின் சத்தம் என்பன இடையூறு ஏற்படுத்தினால் அவை அவ்விடத்திலேயே நின்று அட்டகாசம் புரிய ஆரம்பிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து அப் பகுதிக்கு சம்மாந்துறை பொலிஸ் நிலையப் போக்கு வரத்துப் பொலிஸார் வருகை தந்து வீதியின் இருமுனையிலும் நின்று வீதியால் பயணம் செய்யும் வாகனங்களை நிறுத்தி விசில் அடித்தவுடன் யானைக் கூட்டம் வீதியை கடந்து செல்வதையும் காணமுடிகின்றது.

இவ்வாறு அண்மைக்காலமாக தினந்தோறும் இச்சம்பவம் இடம்பெறுவதனால் யானைக் கூட்டத்தை கட்டுப்படுத்தி காட்டுக்கு விரட்டு வதற்கு அவ்விடத்திற்கு வனஜீவராசிகள் திணைக் களத்தினர் வருகை தருவதில்லை என்கின்ற குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# சீத்துவக்கேடு 58



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

வெறி எண்டாப் போல லேசா நினைக்காதை கண்டியோ. உந்த வெறி எண்ட சொல்லு நீ பெருமையா சொல்லுற பழைய பாட்டுகள் எத்தினையில கிடக்குத் தெரியுமே எண்டுவார் அப்பு.

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன், வெறியாட் டயர்ந்த காந்தளும்" (தொல்) வேலன் தைஇய வெறிஅயர் களனும் (திருமுருகாற்றுப்படை), வேலன் புனைந்த வெறியயர் களம் (குறுந்தொகை 53), வெறிகமழ் வணரைம்பால் (கலித். 57). வெறிபுரியேதில் வேலன் (அகநா. 292), வேலனேத்தும் வெறியுமுளவே (பரிபா. 5, 15), இறும்பகலா வெறியும் (மணி. 19, 97), வெறிகொளாக மாயை யாதலின் (ஞானா. 59,5) வெறிக்களங் கடுப்ப வீதியு முற்றமும் (மதுரைக் காஞ்சி105) வெறிக்களம் கடுக்கும்வியலறை' (149–50 மலைபடு கடாம் )

வெறி கொண் மதமலைகளும் (மகாபாரதம்) வெறிகோள் பண்ணியும் தொழில்தலைப் பெயர்த்தவன் (பெருங்கதை),

எறியுநீர் வெறிகொள் வேலை , வெறிகொள் பூந்துளவ மாலை (நாலாயிரம் திவ்ய பிரபந்தம்) வெறிகொள் மிழலையீர் (சம்பந்தர் தேவாரம்), வெறிகொள் பூம்பொழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே (சம்பந்தர் தேவாரம்) வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப் (அகம் 106),

வேலன் வெறிஅயர் வியன்களம்" (அகம்–18217 ) வெறிகொள் ஐம்பொறியை (திரு விளையாடல் புராணம்), வெறிகொள் துழாய்மலர் நாறும்,வெறிகொள் சோதி மூர்த்தி (நம்மாழ்வார்), வெறிஅயர் வியன்களம் பொலிய ஏத்தி (அகம் 242) வெறிஅயர் வியன்களம் பொற்ப (அகம் 98),

வெறிக்களம் கடுக்கும் வியல் அறைதோறும் (மலைபடு கடாம் 150), கறிவளர் சிலம்பின் கடவுள் பேணி அறியா வேலன் வெறிஎனக் கூறும் (ஐங்குநுறூறு 243) எண்டு வெறி வெறி எண்டு எத்தினை இடங்களிலை இருக்கு கண்டியோ.

நீ விடிய விடிய பாடுற தேவாரத்தில நாலாயிர திவ்விய பிரபந்தத்தில எல்லாம் வெறியைப் பற்றிச் சொல்லிகிடக்கு கண்டியோ. அதால என்னை சும்மா வெறியில கதைக்கிறன் எண்டு சொல்லாதை பிறகு கடவுளுக்கும் பிடிக்காது உன்னோட கோவிச்சுப் போடுவார் எண்டுவார். கடவுள் எண்டதும்தான் எனக்கு ஞாபகம் வருகுது வெறி எண்டால் வேலன். அதுதான் முருகன் எண்டும் ஓர் அர்த்தம் இருக்காம் எண்டு நான் சொல்லேல்லை. உன்னை மாதிரி படிச்ச ஆக்கள் சொல்லுகினம்.

பழைய எங்கட சங்க கால ஆக்களிட்டை அந்த முருகனுக்குப் பிடிச்ச வழிபாட்டு முறையா வெறியாட்டு முறை எண்டு ஒண்டு இருந்ததெண்டு உந்த பழைய பாட்டுகளிலை இருக்கு கண்டியோ எண்டுவார். உந்த வெறியாட்டு முறையில எங்கட பழைய ஆக்கள் முருகனை மட்டுமில்லை கொற்றவையையும் கும்பிட்டு இருக்கிறாங்கள் கண்டியோ எண்டுவார் அப்பு.

சங்க காலத்தில நடக்கிற சண்டையில வெல்லுற அரசன் தேரிலை இருந்துகொண்டு வெற்றி ஊர்வலம் வருவானாம். இப்பிடி வரேக்கை தேருக்கு முன்னுக்கும் பின்னுக்கும் அவன்ரை வீரர்களும் ஆக்களும் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வருவினமாம். அப்பிடி தேருக்கு முன்னுக்கு ஆடுறதை முன்தேர்க்குரவை எண்டும் தேருக்கு பின்னுக்கு ஆடுறதை பின்தேர்க்குரவை எண்டும் சொல்லுறதாம். முந்தி எங்கட ஆக்கள் ஆடிப் பாடி கும்பிட்ட வெறியாட்டுதல் முறைதான் பிறகு குரவையா வந்ததெண்டு விசயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம் கண்டியோ.

உந்த வெறியாட்டின்ரை தொடர்ச்சியாவாக்கும் இப்பவும் கன கோயில்களிலை ஆக்கள் கலை ஆடுறவை எல்லே. சிலநேரம் உண்மையா கலை ஆடுறவையோட சேர்ந்து பின்னுக்கு நிண்டால் சாமி தெரியாது முன்னுக்குப் போனாத்தான் பாக்கலாம் எண்டு நினைச்சு ஆடி ஆடி முன்னுக்குப் போக ஆடுறவையும் மேளச் சத்தத்துக்கு ஆடுறவையும் கற்பூர மணத்துக்கு ஆடுறவையும் சேர்ந்து ஆடுறதால உண்மையா கலை ஆடுறவையையும் ஆக்கள் இப்ப கணக் கெடுக்கிறேல்லை கண்டியோ உப்பிடி சும்மா ஆடுறவையை விட கள்ளு வெறியிலை ஆடுறவை எவ்வளவோ திறம் கண்டியோ எண்டுவார் அப்பு.

உடன ஆச்சி நிப்பாட்டும் காணும் கனக்க கதைக்க வேண்டாம். முந்தி அந்தக் காலத்தில குடிச்சு வெறியேத்தி ஆளாளுக்கு சண்டை பிடிச்சு எங்கடை ஆக்கள் சீரழிஞ்சு போனவை எண்டதாலதானே திருவள்ளுவர் கள்ளுண்ணாமை எண்டு ஒரு அதிகாரமே பாடி இருக்கிறார். பதினெண்கீழ்க்கணக்கு பாட்டுகள் எல்லாமே கள்ளு கூடாதெண்டெல்லே சொல்லுது.

முந்தி எங்கட ஆக்கள் குடிவெறி இல்லாம ஒழுங்கா இருந்திருந்தால் ஆரியன் அரேபியன் களப்பிரன் எண்டு அந்நியர் வந்து எங்களை ஆண்டிருப்பாங்களோ.

இல்லாட்டில் எங்கட பெண்புரசுகளை ஆண்டிருப்பாங்களோ எங்கட கோயில் குளம் எல்லாம் உடைச்சு அவன் ஆர் மாலிக்காபூர் நூற்றுக்கணக்கான யானையளிலை தொன் கணக்கா தங்கத்தைக் கொண்டுபோய் ஆப்கானிஸ்தானை வளம்படுத்தின மாதிரி தங்கட நாடுகளை வளம்படுத்தி இருப்பாங்களோ.

எங்கட ஆக்களை மதம் மாத்தி இருப்பாங்களோ எங்கடை கலைப் பொருட்கள் எல்லாத்தையும் கொள்ளை அடிச்சிருப்பாங்களோ எங்கட ஆக்கள் எழுதின புத்தகங்கள், ஏடுகளை அழிச்சிருப்பாங்களோ எவ்வளவு அழிவு. எவ்வளவு அவலம் எல்லாம் வந்தது எண்டு உந்த பழைய பாட்டுகள், புத்தகங்கள் சொல்லுது எல்லே எண்டு ஆச்சி எழும்பி ஒரு வெறியாட்டு ஆடுவா. அப்பு வாயடங்கிப் போய் இருப்பார்.

நீ எப்பிடி கள்ளைப் பற்றிப் பெருமையா பழைய பாட்டுகளிலை இருக்கெண்டு சொன்னியோ அதுமாதிரி கள்ளுக் கூடாதெண்டும் கன பழைய பாட்டுகளிலை இருக்கு உனக்குத் தெரியுமோ எண்டுவா ஆச்சி. ஆக, நீ உங்க இருக்கிற சில ஆக்கள் மாதிரி உனக்கு தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதை சிம்பிளா விடுகிறாய் எண்டு ஆச்சி அப்புவிட்டைக் கேட்க அப்பு சொல்லுவார். அப்ப என்ன அந்தப் பாட்டுகளை கொஞ்சம் அவிட்டு விடன் எண்டு சொல்லுவார்.

(தொடரும் )



# இனிய பழைமையை மறவாது காப்போம்!



வானத்தில் அறிவுக்கு எட்டாத விந்தைகள், கடலுக்கு அடியில் காணமுடியாத அற்புதங்கள், பூமியில் புதைந்து கிடைக்கும் செல்வங்கள் என உலகில் விரிந்திருக்கும் அனைத்து அதிசயங்களும் இயற்கை எனும் வரமாக இறைவன் மனிதனுக்கு தந்தது. ஆனால், இன்று மறைந்த காடும், மாசுபட்ட காற்றும், நீரில்லா ஆறும், மண்ணில் வடுவாக காட்சியளிப்பதற்கு மனிதனே காரணம். அதனால் இயற்கையே இன்று புத்தம் புது பூமி வேண்டும், நித்தம் ஒரு வானம் வேண்டும் என தன் தேடலை துவங்கி விட்டது.

### மூன்றாவது யுத்தம்

இயற்கை தடம்மாறி, தன்னுடைய வழியை மாற்றினால் மனிதனுக்கு வலியே மிஞ்சும். மனிதனால் உலகம் 2 மகாயுத்தத்தை கண்டது. இன்று கொரோனா என்ற வைரஸால் மூன்றாவது உலக யுத்தத்தை எதிர்கொண்டிருக்கிறது. மனிதன் இயற்கையை புறக்கணிக்கும்போது, இயற்கை மனிதனை முற்றிலும் புறக்கணித்து தன்னுடைய வல்லமையை நிலைப்படுத்தும். இயற்கை இன்று நாம் மறந்துபோன - கலைந்துபோன பழக்கவழக்கங்களையும், கலாசாரத்தையும் உணர்த்தியுள்ளது. மனிதன் இயற்கையுடன் இயைந்து வாழ்ந்தால் அல்லலின்றி வாழலாம் என்று இன்று நிரூப்பித்துள்ளது.

### உணவே மருந்து

உணவே மருந்து என்பது மாறி இன்று மருந்தே உணவாகிவிட்டது. அன்று நோய் வருமுன் பாதுகாக்கவேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்கள். அதனால் நடைமுறை பழக்கவழக்கங்களை சீராக கடைப்பிடித்தார்கள். உணவையே மருந்தாக ஏற்றுக்கொண்டதால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி மிகுந்திருந்தது. மருந்து என்ற தலைப்பில் அன்றே திருவள்ளுவர் உணவு சீர்திருத்தமே நோயற்ற வாழ்வுக்கு உகந்த வழி என்றார்.

நோயின்றி வாழ உணவுக்கட்டுப்பாடு அவசியம் என்பதை வள்ளுவம் வலியுறுத்துகிறது. உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே என திருமூலர் நோய் தடுக்கும் நெறியை பல பாடல்களில் தெளிவுபடுத்தியுள்ளார். நோய் வருமுன் பாதுகாக்க, உணவுநெறி, பண்பாட்டு நெறி மற்றும் யோக நெறியை பின்பற்றவேண்டும்.

### உணவு நெறி

உணவு நெறியை உணவு முறை என்றும் கூறலாம். முன்னோர்கள் வாழவைத்த இயற்கை உணவுகளின் வடிவங்கள் மாறிவரும் இந்நேரம், மறுபடியும் கொரோனோவால் புத்துணர்வு பெற்று மனிதர்களை சிந்திக்க வைத்திருக்கிறது. வீட்டுத்தோட்டத்தில் விளையும் மூலிகைகளும், அஞ்சறைப்பெட்டிப் பொருட்களும் இன்று வைரஸை எதிர்க்கும் பேராற்றல் உடையதாய் கருதப்படுகின்றன.

'மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில் இளகும் மேனி இருளுங் கபாலமே' என்று திருமந்திரம் கூறுகிறது. பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டில் கூட உண்ணலாம் என்ற பழமொழி உணவே மருந்து என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. கற்றாழை வயிற்றுச்சூட்டை தடுக்கவும், துளசி தொண்டை வலியை குணப்படுத்தவும், புதினா வாந்தியை நீக்கவும், கொத்தமல்லி பசியை தூண்டவும், கறிவேப்பிலை முடியை வலுவாக்கவும், பூண்டு இரத்த அழுத்தத்தை நீக்கவும், மிளகு நெஞ்சுச்சளியை நீக்கவும், இஞ்சிக்கு மிஞ்சி எந்தவொரு மருந்தும் இல்லை எனக் கூறப்படும் இஞ்சி, காய்ச்சல் வராமல் பாதுகாக்கவும், மஞ்சள் இருக்க அஞ்சேல் எனக் கூறப்படும் மஞ்சள், புண்களை ஆற்றவும், தொற்றுகள் வராது தடுக்கவும், எலுமிச்சை கல்லீரலை பலப்படுத்தவும், தலைசுற்றலை நீக்கவும் அதிகம் பயன்படுத்தப்பட்டது.

### நினைவுபடுத்திய கொரோனா

கடந்த காலத்தில் உண்டதை கொரோனா நினைவுகூர வைத்துவிட்டது. நவீன உணவுக்கு மாறிய பின் புதுமையான கிருமிகளும் நம்மை ஆட்கொண்டிருக்கின்றன. புதுமைகளை ஏற்பதில் தவறில்லை. ஆனால், பழைமை தந்த நல்லவற்றை மறக்காதிருப்போம்.

'உறுதுணையாவது உயிரும் உடம்பும்' என்கிறது திருமந்திரம். உடம்புக்கு குறைபாடு ஏற்படின், அத்துடன் சேர்ந்து உள்ளமும் மாறுபட்டு அழிவர் என்று திருமூலர் கூறுகிறார். உடலில் எதிர்பாராது பிணி ஏற்பட்டாலும் அதை கண்டு அஞ்சாது அதிலிருந்து விடுபட மனவுறுதியுடன் இருப்பது அவசியம். உடலுக்குச் சிறந்த கவசம் யோகப்பயிற்சியே.

யோகப்பயிற்சி உடலில் காற்று ஓட்டம், வெப்ப ஓட்டம், இரத்த ஓட்டத்தை சீராக வைத்துக்கொள்ள உதவும். பிராணாயாம பயிற்சி செய்வது நலம். பிராணன் என்றால் காற்று. காற்றை கட்டுப்படுத்துவது பிராணாயாமமாகும். இது நுரையீரல்களின் இயக்கத்தை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நலமுடன் இயங்க வைக்கிறது.





### உடல் காற்று

பிராணாயாமம் செய்யும் முறையை அறிந்தவர்கள் எமனையே கடக்கும் குறிக்கோள் பெற்றவர்கள் என்று திருமந்திரம் உரைக்கிறது. உடலுக்குள் காற்று சமன் செய்யப்பட்டால் உடல் பல பிணிகளிலிருந்து விடுபடும். தொன்மை மறவேல் என்று ஔவையார் வரும் சந்ததியினரை நினைத்து சிந்தித்துக் கூறியுள்ளார். ப்ளேக், கொலரா, ஸ்பானிஷ் ப்ளூ, சார்ஸ், மெர்ஸ் என பலவிதமான வைரஸ் நோய்களை உலகம் ஒவ்வொரு காலகட்டத்திலும் சந்தித்து அதிலிருந்து மீண்டுவருகிறது.

எந்த தொற்றுக்கிருமிகளையும் எதிர்க்கும் வல்லமை நமது பழைய பழக்க வழக்கங்களில் கலந்திருந்தது. அன்று ஒவ்வொரு வீட்டிலும் அதிக இடப்பரப்பு இருந்ததால் வாசலில் வேப்ப மரம் வளர்த்தார்கள். அம்மரம் தொற்றுக்கிருமிகளை நீக்கும் காவல் மரமாக இருந்தது. துளசி செடி மாசற்ற காற்றை உருவாக்குவதால் வீட்டுக்குள் வளர்த்து இன்றும் தெய்வமாய் வழிபடுகிறார்கள். வாசலிலேயே தொற்றுக்கிருமி நுழையாமல் இருக்க பசுஞ்சாணத்தால் தண்ணீர் தெளிக்கப்பட்டது.

### வீட்டுக்குள் கிருமிகள்

வீட்டு வாசலில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரால் கை, கால்களை தூய்மைப்படுத்திய பின்னரே அனைவரும் வீட்டிற்குள் செல்வார்கள். இன்று நாமே நம்மை அறியாமல் தொற்றுக்கிருமிகளை வீட்டிற்குள் கொண்டுவருகிறோம். விண்ணில் மனிதன் பறந்தாலும், மண்ணில் விளைவதை நம்பியே வாழ்கிறான். அதுபோல புதுமைப்பாதையில் சென்றாலும், தொன்மை மறவாது இருக்கவேண்டும். மறந்துபோன வாழ்க்கையின் நல்ல பழக்கங்களை புரட்டிப் பார்ப்போம். நல்ல புதுமைகளை ஏற்போம். இனிய பழைமைகளை மறவாது காப்போம்.

-முனைவர் ச.சுடர்க்கொடி

# டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக ரியான் ஹாரிஸ்



இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ரியான் ஹாரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆரம்பகாலத்திலிருந்து இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் பங்கேற்கும் அணிகளில் ஒன்றான டெல்லி அணியின் பெயர் ஆரம்பத்தில் டெல்லி டெயார்டெவில்ஸ் என காணப்பட்டது. பின்னர் அதன் பெயர் டெல்லி கெப்பிடல்ஸ் ஆக மாற்றமானது. இந்தியன் பிரிமியர் லீக் வரலாற்றில் டெல்லி கெப்பிடல்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றவில்லை என்பதுடன், இறுதிப் போட்டிக்கும் தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் செயற்பட்டு வருகிறார். ஆரம்பத்தில் டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக ஜேம்ஸ் ஹோப்ஸ் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், தற்போது அவர் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் குறித்த பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ரியான் ஹாரிஸ் குறித்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். ரியான் ஹாரிஸுக்கு பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட அனுபவம் உள்ளது. மேலும், கடந்த வருடம் கிங்ஸ் இலவன் பஞ்சாப் அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ் கெய்லுக்கு கொரோனா இல்லை.. விரைவில் டுபாய் பயணம்




உலகின் அதிவேக மனிதர் என்றழைக்கப்படும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் 8 முறை தங்கப் பதக்கங்களை வென்ற உசைன் போல்ட் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், உசைன் போல்ட்டின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்லுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

உசைன் போல்ட் தனது 34ஆவது பிறந்தநாளை கடந்த வாரம் விமரிசையாகக் கொண்டாடினார். கிரிக்கெட் வீரர் கெய்ல் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இதன்போது உசைன் போல்ட்டுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இந்நிலையில், உசைன் போல்ட்டின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்ட கிறிஸ் கெய்ல், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொரோனா பரிசோதனை மேற்கொண்டதில் அவருக்கு கொரோனா இல்லை என்பது உறுதியாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் கிங்ஸ் இலவன் பஞ்சாப் அணியில் இடம்பெற்றுள்ள கிறிஸ் கெயில், தொடரில் பங்கேற்பதற்காக விரைவில் டுபாய் பயணிக்கவுள்ளார்.

# ஜோகோவிச் – வில்லியம்ஸ் மூன்றாவது சுற்றுக்கு தகுதி



அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு நோவக் ஜோகோவிச், செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தகுதி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் கழுத்து வலி உபாதைக்கு மத்தியில் விளையாடிய உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவைச் சேர்ந்த நோவக் ஜோகோவிச் 7-6 (7-2), 6-4 என்ற நேர்செட் கணக்கில், லிதுவேனியாவைச் சேர்ந்த ரிச்சர்ட்ஸ் பெரான்கிஸ்சை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான அமெரிக்காவைச் சேர்ந்த செரீனா வில்லியம்ஸ் 7-6 (8-6), 3-6, 7-6 (7-0) என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் அரன்ட்சா ருஸ்சை 2 மணி 48 நிமிடங்கள் போராடி வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார். இதேவேளை, ஜப்பானின் நவோமி ஒசாகா, பெலாரஸின் சபலென்கா மற்றும் இங்கிலாந்தின் ஜோஹன்னா கோன்டா ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

thamilansports@yahoo.com
கிருத்தி – அகில்

# மூன்றாவது டெஸ்டும் சமநிலையில் நிறைவு: தொடர் இங்கிலாந்து வசமானது



இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவுக்குவர, இங்கிலாந்து அணி முதல் டெஸ்ட் போட்டியில் பெற்ற வெற்றியுடன் தொடரை 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

சுற்றுலா பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டியானது தொடர் மழை காரணமாக குறைந்த ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் சவுதம்டணில் நிறைவுக்குவந்தது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை தெரிவுசெய்தார்.

அதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 583 ஓட்டங்கள் குவித்த நிலையில், தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஷக் க்ரௌலி இரட்டை சதம் அடித்து 267 ஓட்டங்களையும், ஜொஸ் பட்லர் 152 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக குவித்தனர்.

தொடர்ந்து பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. இங்கிலாந்து வீரர்களின் சிறப்பான பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 273 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் அஸார் அலி இறுதிவரை ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்களை குவித்தார். இங்கிலாந்தை விட 310 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி 'பலோ ஒன்' முறைக்கு உள்ளானது.




மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, 4 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் போட்டியின் இறுதி நாளான ஐந்தாவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

போட்டியின் ஆட்டநாயகன் விருது இரட்டை சதமடித்த இங்கிலாந்து வீரர் ஷக் க்ரௌலிக்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகன் விருது இங்கிலாந்து வீரர் ஜொஸ் பட்லருக்கும், பாகிஸ்தான் வீரர் முஹமட் ரிஸ்வானுக்கும் வழங்கப்பட்டது.

# 700 விக்கெட்டுகள் வீழ்த்துவேன் ! – உறுதியுடன் அண்டர்சன்




இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் 600 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ள நிலையில், இன்னும் 100 விக்கெட்டுகள் வீழ்த்துவேன் என அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று முன்தினத்துடன் நிறைவுக்கு வந்தது. இதன்போது இங்கிலாந்து அணியின் 38 வயதுடைய வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்சன், பாகிஸ்தான் அணியின் தலைவர் அஸார் அலியின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தனது 600ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்.

இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்சன் தற்போது கிரிக்கெட் விளையாடும் வீரர்களில் அதிகமான விக்கெட்களை வீழ்த்தியவர் என்ற சாதனையை தன் வசம் வைத்துள்ளார். இந்நிலையில், 600 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் பின்னர் கருத்து தெரிவித்த அண்டர்சன்,

"நான் ஆஷஸ் தொடரில் இருக்கவேண்டும் என பயிற்சியாளர் விரும்புகிறார். இப்போது என்னுடைய பந்துவீச்சைப் பார்க்கையில் என் திறமை வற்றிவிடவில்லை எனத் தெரிகிறது. என்னால் 700 விக்கெட்கள் வீழ்த்த முடியும்... ஏன் முடியாது?" என கேள்வியும் எழுப்பியுள்ளார்.

# பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் சாய்ந்தமருதில் ஆரம்பம்

(எம்.என்.எம்.அப்ராஸ்)

இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்படும் 2020ஆம் ஆண்டுக்கான பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது இளைஞர் சேவை மன்ற காரியாலயத்தில், சாய்ந்தமருது இளைஞர் சேவை அதிகாரி எம்.எச்.எம்.பைசால் அமீன், சாய்ந்தமருது இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.றிஹான் மற்றும் சம்மேளன தலைவர் இக்தார் முன்னிலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.



ஆரம்ப முதல் போட்டியாக கெரம் போட்டி நடைபெற்றது. இதில் சாய்ந்தமருதைச் சேர்ந்த பல இளைஞர் கழகங்கள் பங்குபற்றின.





மேற்படி போட்டியில் வெற்றியாளராக சாய்ந்தமருது பிளைங் கோர்ஸ் இளைஞர் கழகம் தெரிவு செய்யப்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7